மதிய உணவு வகைகள்
இறைச்சி, மீன், மரக்கறி
சோறு - பிரியாணி
மாலையில் றொட்டி,
கொத்துறொட்டி
உங்கள் பசியைப் பூர்த்தி
செய்கிறோம்.
தேனமுதம்
452 கேணல் கிட்டுசாலை,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுவைப் பிரியர்களே!
சுவைமிக்க காலை உணவு
அப்பம், பிட்டு, இடியப்பம்.
சுவைத்து மகிழ்ந்திட
நாடுங்கள்:
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-540)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 16 செவ்வாய்க்கிழமை (28 - 02 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 96

# கொடுத்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை

## பி. பி. ஸி. பேட்டியில் யாழ். ஆயர்

லண்டன், பெப்ரவரி 28

பேச்சுக்களின் போது கொடுத்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை. இது மக்கள் மத்தியில் உற்சாகமின்மையை ஏற்படுத்தியிருக்கின்றது.

— பி. பி. ஸி. தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அண்மையில் யாழ். வந்திருந்த பி. பி. ஸி. தமிழ்ச் சேவையின் செய்தியாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்துக்கு யாழ். ஆயர் பேட்டியளித்தார்.

அப்பேட்டியின்போது ஆயர் குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:-

அரசு - புலிகள் பேச்சுவார்த்தை மூலம் யுத்த தவிர்ப்பு நிலைமை வந்துள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பயம் நீங்கியுள்ளது.

மீனவர்கள் தமது தொழிலை ஓரளவேனும் மேற்கொள்ளும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களைப் பொறுத்தவரை நிலைமை வரவேற்கத்தக்கது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் தவிர்ப்பைப் பயன்படுத்தி கடற்படையை விஸ்தரிக்கத் திட்டம்

ஸ்ரீலங்கா கடற்படையை விஸ்தரித்துப் பலப்படுத்தும் நடவடிக்கையில் கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையில் தற்போது அதிகாரிகளும், சிப்பாய்களுமாக 9 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களுடன் சில ஆயிரம் புதிய படையினரைத் திரட்ட திட்டங்கள் தயாரிக்கும்படி பிரிவுகளின் தலைவர்களை தளபதி கேட்டுள்ளார் என்றும் —

கடற்படையின் கப்பல் பலம் அதிகரிக்கப்படவிருப்பதாகவும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது

தற்போதைய மோதல் தவிர்ப்பு நிலையை, தனது எதிர்காலத் திட்டங்களை மேற்கொள்வதற்கு சாதகமாக கடற்படை பயன்படுத்தி வருவதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

இந்து சமுத்திர நாடுகளுடன் அந்தமான் தீவுகள் அருகே

## கூட்டு கடற்படை பயிற்சி ஒத்திகையில் ஸ்ரீலங்காவின் "ஜயசாகரா" கப்பல்!

கொழும்பு, பெப். 28

இலங்கைக் கடற்படையின் மிகப்பெரிய போர்க்கப்பலான "ஜயசாகரா" வங்காள விரிகுடாவில் — அந்தமான் தீவுகளுக்கு அருகில் — கூட்டுக் கடற்படைப் பயிற்சி ஒத்திகையில் கலந்துகொண்டுவிட்டு கடந்த வாரம் கொழும்பு திரும்பியதாக அறிவிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் கடற்படைகளுடன் சேர்ந்து இலங்கைக் கடற்படை இப்பயிற்சியில் கலந்து கொண்டது. இப்பயிற்சிக்கு 'மிலான் 1995' என்று பெயரிடப்பட்டிருந்தது.

இலங்கை, கூட்டுக் கடற்படைப் பயிற்சி ஒன்றில் கலந்து கொண்டது கடந்த பல ஆண்டுகளில் இதுவே முதல் தடவையாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கற்பிட்டிக் கடலில் 'சாகரவர்த்தனா' கப்பலும் வேறு கப்பல்களும் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டதை அடுத்து குறைந்திருந்த கடற்படையினரின் மனோதிடத்தை மீண்டும் கட்டி எழுப்புவதில் கடற்படைத் தளபதி ஈடுபட்டிருக்கிறார் என்றும் —

இதன் ஒரு கட்டமாக கடற்படைத் தளங்களுக்கு அருகில் திருமணமான படையினருக்கு விடுதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

## புலிகள் காவலில் உள்ள பொலீஸார் நாளை முதல் உண்ணாவிரதமிருப்பர்?

யாழ்ப்பாணம், பெப். 28

விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் ஸ்ரீலங்கா பொலீஸார், தமது விடுதலைக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தும் வகையில் நாளை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவிருப்பதாக தெரியவருகின்றது

எத்தனை கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றுவர் என்ற விவரம் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை —

இந்தப் போராட்டம் குறித்த அறிவிப்பை ஸ்ரீலங்கா அரசுக்கு தெரியப்படுத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மறுத்துவிட்டதாகக் கூறப்பட்டது.

## புலிகளுக்கு எதிராக பேசாதீர்கள்! ஐ.தே.கவின் எம்.பிக்களுக்கு உத்தரவு

### கட்சித் தலைவர் ரணில் விடுத்துள்ளார்

கொழும்பு, பெப். 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று ஐ. தே. கவின் எம்.பிக்களுக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் குறித்து தேவையற்ற முறையில் கண்டனம் தெரிவிப்பது ஐக்கிய தேசியக்கட்சியை இனவாதக் கட்சி என்று காட்டும் தோற்றத்தையே உருவாக்கும் என்றும் ரணில் கூறியிருக்கிறார்.

எல்லா இனத்தவர்களின் நலன்களையும் பேணும் இனவாதமற்ற கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை எனது தலைமையில் கட்டி எழுப்ப முயற்சித்து வருகிறேன் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவரின் உத்தரவை மீறி விடுதலைப்புலிகளின் கண்ணியத்தைக் குறைக்கும்பேச்சுக்களைநிகழ்த்துபவர்கள் மீதுஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர் என்று "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது. (உ-எ)

## கண்காணிப்பு குழுக்கள் இயங்குவதை ஸ்ரீலங்கா அரசு விரும்பவில்லை!

### புலிகள் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 28

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை கண்காணிக்க வேண்டிய — வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்ற — கண்காணிப்புக் குழுக்களை இயங்கவைப்பதில் ஸ்ரீலங்கா அரசு அக்கறை காட்டவில்லை என்று விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடு குறித்துக் கேட்டபோதே விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேற்படி கண்டனத்தை வெளியிட்டன

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் உருவானபோது அதனைக் கணகாணிக்க வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் ஆறு கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது தெரிந்ததே.

ஆனால் பின்னர் அரசு தன்னிச்சையாக நான்கு குழுக்களை மட்டுமே அமைக்க முனைந்தது என்றும் -

பின்னர் புலிகள் கொடுத்த அழுத்தத்தின் பேரில் ஆறு குழுக்களை இயங்க வைக்கும் ஏற்பாட்டை அரசு ஏற்றுக் கொண்டது என்றும் ..

ஆனால் அந்தக் குழுக்களை இயங்க வைப்பதில் அரசு இதுவரை அக்கறை காட்டவில்லை என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நான்கு கண்காணிப்புக் குழுக்களுக்கு மேலதிகமாக அமைக்கப்படவேண்டியுள்ள மறைய இரு குழுக்களிலும் இடம்பெறும் வெளிநாட்டுப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் நாளை முதல் பாண் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களில் (பேக்கரிகளில்) இன்று இரவு பாண் உற்பத்தி செய்யப்பட்டு அது நாளை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கவட்டாரங்கள் தெரிவித்தன,

மா விநியோகம் தொடர்பாக சங்கத்துக்கும், செயலக அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பையடுத்து பாண் உற்பத்தி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு.க. பொன்னம்பலம் தலைமையில் நேற்றுக் காலை செயலகத்தில் நடந்த சந்திப்பின் போது—

மா விநியோகம் சம்பந்தமாக நிலவிய தடங்கல்களை நீக்கி, வெதுப்பகங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மா வழங்க இணக்கம் காணப்பட்டது என்றும்—

அதனையடுத்து நாளை காலை முதல் வெதுப்பக உற்பத்திகளை விநியோகிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என சங்கம் முடிவு செய்தது என்றும்—

சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3)

## விமானத்தால் சேதமுற்ற வீட்டுக் கூரை

கொழும்பு, பெப். 28

நேற்றுப் பிற்பகல் பரீட்சார்த்த சேவையில் ஈடுபட்டிருந்த எயர் லங்கா நிறுவனத்தின் "ட்ரை - ஸ்ரார்" விமானம் ஒன்று தாழப் பறந்து சென்றதால் தனியார் ஒருவரின் வீட்டின் கூரைக்கு சேதம் ஏற்பட்டது என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெறுகின்றது என்று —

விமானம் தாழப் பறந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக வீட்டின் கூரை சேதமுற்றிருக்கலாம் என்றும்—

"எயர் லங்கா" அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-4)

## ஓய்வூதிய வவுச்சர்கள் தபாலில்!

யாழ்ப்பாணம், பெப் 28

பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் தாபல் மூலம் இன்று ஓய்வூதியர்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

நேற்று விடுமுறை தினமாக இருந்த போதும், செயலகத்தால் வழங்கப்பட்ட ஓய்வூதிய வவுச்சர்களை உடன் தரம் பிரித்து இன்று விநியோகிப்பதற்கான வேலைகளில் யாழ் பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர். (உ-3-100)

## ஜெனரேட்டர்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 28

பாரிய இரு ஜெனரேட்டர்கள் மற்றும உணவுப் பொருள்களுடன் "லங்கா முடிதா" கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் இருந்து நேற்று ஜெனரேட்டர்கள் இறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

அதன்பின் அக்கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் என்றும் —

வடக்கே வந்துள்ள ஏனைய கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்டதும் இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஏமாற்றத்துடன் திரும்பிய பயணிகள்

யாழ்ப்பாணம், பெப். 28

நேற்று நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட "நரேமா" கப்பல் சேவை நேற்று நடைபெறாததால் ஏராளமான பயணிகள் அதிகாலை வேளையில் பருத்தித்துறைக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர்.

'நரேமா' கப்பலின் அடுத்த சேவை எப்போது நடைபெறும் என்று நேற்று மாலை வரை யாழ் செயலகத்துக்கு தகவல் கிடைக்கவில்லை. (உ-3)

## இராணுவ அதிகாரி நியமனம்

கொழும்பு, பெப். 28

இராணுவ இரகசியப் பிரிவின் [illegible] நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு உயரதிகாரியின் உளவு நடவடிக்கையால்

## சந்திரிகா, கேணல் அனுருத்த உட்பட தலைவர்கள் பலருக்கு உயிராபத்து!

கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க, பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை உட்பட பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர்களின் உயிர்களுக்கு பயமுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அரச புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

தேசிய புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரே இத்தலைவர்களின்நடமாட்டங்கள் பற்றிய தகவல்களை தேவையற்ற சில சக்திகளுக்கும் பத்திரிகைகளில் ஒரு பிரிவுக்கும் வழங்கி வருகின்றார் என்ற தகவல் அரசுத்தலைமைப் பீடத்துக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

— இவ்வாறு "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி சந்திரிகா தமது நடமாட்டங்களை ஓர் ஒழுங்கு முறையில் வைக்கக் கூடாதென இராணுவப் புலனாய்வாளர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்; இந்த

(2ஆம் பக்கம் பார்க்க)

படுகொலையுண்ட பிரபல பத்திரிகையாளர்

## றிச்சர்ட் டி சொய்ஸாவின் சடலம் ஹெலி மூலம் கடலில் வீசப்பட்டது?

கொழும்பு, பெப். 28

பிரபல பத்திரிகையாளரான றிச்சர்ட் டி சொய்ஸா படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலம் ஹெலிக்கொப்டர் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டு நடுக்கடலில் வீசப்பட்டது என்று புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இக்கொலை பற்றி விசாரணை நடத்தும் பொலீஸ் அதிகாரிகள் இப்புதிய தகவலை அரசாங்கத்திடம் தெரிவித்திருப்பதாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

### விசாரணையில் புதிய திருப்பம்

மொறட்டுவப் பகுதியில் கொரலவெல கரையோரத்தில் றிச்சர்ட் டி சொய்ஸாவின் சடலம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முதல் நாள் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சுமார் 20 மணித்தியாலங்கள் வரை கடற்பகுதியில் பறந்து திரிந்தன என்றும்—

அது வழமைக்கு மாறானதாக அமைந்தது என்றும்—

அப்பகுதி வாசிகள் விசாரணையாளர்களிடம் தெரிவித்தனர்.

அதேபகுதியில் சிறிய ரக

(6 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறும்

## இந்திய மீனவர்களை விசாரிக்க வடக்கில் இரு விசேட நீதிமன்றங்கள்

### தலைமன்னார், ஊர்காவற்றுறையில் அமைக்கப்படும்

கொழும்பு, பெப் 28

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை விசாரணை செய்ய இரண்டு சேட நீதிமன்றங்களை அமைக்கும்படி அரசாங்கம் இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

தலைமன்னாரிலும் ஊர்காவற்துறையிலும் இவ்விரண்டு நீதிமன்றங்களும் இவ்வாண்டுக்கடைசியில் இயங்கத் தயாராக இருக்கும் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் வரும் இந்திய மீன்பிடி வள்ளங்களைக் கண்டுபிடித்து இந்தியக் கடற்பகுதிக்குள் அவற்றைத் துரத்தி விடும் நடவடிக்கையையே இலங்கைக் கடற்படை இதுவரை மேற்கொண்டு வந்தது என்றும்—

அரசின் புதிய உத்தரவு இவ்வழக்கத்தை முற்றாக மாற்றுவதாக அமைந்துள்ளது என்றும்—

"சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது

இந்த நடவடிக்கையை எடுக்க அரசு ஏன் தீர்மானித்தது என்பது தெரியாதிருப்பதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது

அரசின் உத்தரவு இந்திய மீனவர்கள், தமிழ்நாடு அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

புத்தளம் இரணவில பகுதியில்

## "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" நிலையத்துக்கு அருகே தீ!

கொழும்பு, பெப். 28

புத்தளம் இரணவிலவில் உள்ள "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலையத்தில் இருந்து சுமார் 10 மீற்றர் தூரத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென பெரும் தீ பரவியது

எனினும் அப்பகுதி மக்களின் உதவியுடன் சுமார் ஒரு மணி நேரத்தில் அது அணைக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

சுமார் மூன்று ஏக்கர் நிலப் பரப்பில் தீ பரவிய போதிலும் அப்பகுதி மக்களின் சொத்துக்களுக்கோ ஒலிபரப்பு நிலையத்திற்கோ பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று ஒலிபரப்பு நிலைய அதிகாரி ஒருவர் சொன்னார்

அந்தப் பகுதியில் கடும் வரட்சியும் வெப்பமும் நிலவுவதால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான விபத்து குறித்து விசாரணை ஆரம்பம்

கொழும்பு, பெப். 28

''உபாலி ரவல்ஸ்'' நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகிய சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விபத்தில் காயமுற்ற பயிலுநர் விமானி ஜப்பானைச் சேர்ந்தவர் என்றும் கொழும்பு தெற்கு களுபோவிலை ஆஸ்பத்திரியில் அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இவருக்குப் பயிற்சி அளித்த விமானியான கிரந்தபெரேரா என்பவர் விமானத்தைத் தனித்துச் செலுத்தும்படி கூறியதைத் தொடர்ந்தே பயிலுநர் விமானி அவ்வாறு செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தை இப்போது பொலீஸாரும் விமானப்படையினரும் காவல் புரிந்து வருகின்றனர். (அ-4)

## இன்று

அபிராமியந்தாதி 53ஆவது செய்யுள் ஆய்வுரை தொடர் வெளியீடு இன்று காலை வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். (உ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 28

புலோலி விவசாய போதனாசிரியர் பிரிவில் நடத்தப்பட்ட கிராமிய மட்டத்திலான வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் நடைபெறும். (இ 5-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 28

சுன்னாகம் பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா பஜனை நிலையத்தின் 7 வருட பூர்த்திவிழாவும், 8 ஆம் வருட ஆரம்ப விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மயிலணி வீதி, சுன்னாகத்திலுள்ள மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் பஜனை, கலை நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (இ-5-14-89)

## நாளை

சுழிபுரம், பெப். 28

நாளை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் அறிவியல் அரங்கில் ''இன்றைய பேச்சுவார்த்தைகளும் நமும்'' என்ற தலைப்பில் விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் உரையாற்றுவார். (உ-28)

★ ★ ★

''பாவை'' முத்திங்கள் அறிவுமலர் அறிமுகவிழா நாளை பிற்பகல் 2 30 மணிக்கு ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறும்

வித்தியாலய அதிபர் திரு. எஸ். முத்துக்குமாரசுவாமி தலைமையில நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் திரு எஸ் குகதாசன், திரு. கே. ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்துவர். (உ-155)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1994 / 95 கல்வியாண்டிற்கு

பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1995 மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்,

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்பு கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரீகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல, தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரீகம்).

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விவரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிநிலைப் பதிவு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 1995 மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் ரூபாய் 50/- செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றை பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 50/- காசுக்கட்டளை /தபால் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.
16-02-1995.

(சி-691)

---

## தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், பெப். 28

நாளை புதன்கிழமை பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் 'சீ டான்சர்' கப்பலில் தபால் பொதிகள் அனுப்பப்படவுள்ளன எனவும்—

ஆகவே வெளியூர்த் தபால்களை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்பிக்கும் படியும்—

யாழ். பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (க)

## அரச அதிபர் கொழும்பு புறப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு பயணமானார்.

வார இறுதியில் அவர் இங்கு திரும்புவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொரிய செய்தியாளர் வருகை

யாழ்ப்பாணம், பெப். 28

கொரியா நாட்டைச் சேர்ந்த தொலைக் காட்சி நிறுவனம் ஒன்றின் செய்தியாளர்கள் நால்வர் யாழ். வந்துள்ளனர். (உ-4)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு!

யாழ்ப்பாணம் பெப். 28

நாளை புதன்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும, இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் நாளை காலை 7 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு சமுகம் தருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார் (எ)

## ஆசிரியர் இடமாற்றத்துக்கு ஆட்சேபனை

நாவாலி அட்டகிரி சைவ வித்தியசாலை ஆசிரியர் ஒருவரை திடீரென இடமாற்றம் செய்ததை ஆட்சேபித்து மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்தனர் என அறியவருகிறது.

மேலும் பெற்றோர் பலர் இந்த ஆசிரியரின் இடமாற்றத்தை ரத்துச்செய்யக் கோரி சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் ஒன்றைக் கடந்த 21ஆம்திகதி கையளிகதனர். (ச-90)

---

யா / வைத்தீஸ்வராக் கல்லூரி

## நெடுந்தூர விதி ஓட்டப் போட்டி

காலம்: **1 · 3 · 95** புதன் காலை 6.00 மணி

ஆரம்பமாகும் இடம்: கல்லூரி முன்றில்

பிரதம விருந்தினர்:

திரு. திருமதி ச. இந்திரகுமார்
(உரிமையாளர், உமாஸ்ரோர்ஸ்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

— அதிபர், ஆசிரியர். மாணவர்கள்

(சி-693)

---

# பாதாள உலக மரணப் படையின் 13 பேரில் 10 நபர்கள் படுகொலை!

கொழும்பு, பெப் 28

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் இயங்கிய பாதாள உலகின் மரணப் படையைச் சேர்ந்த 13 பேரில் பத்துப் பேர் கொல்லப்பட்டு விட்டதாக '' ராவய'' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

முன்னைய அரசு தனக்கு எதிரான பிரமுகர்களைக் கொல்வதற்காக 13 பேர் கொண்ட மரணப்படை ஒன்றை உருவாக்கியிருந்தது.

அந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இப்படையினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பற்றிய இரகசியங்களை மூடி மறைப்பதற்காக அந்தப் படையைச் சேர்ந்த பத்துப் பேர் இரகசியமான — மர்மமான — முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ அதிகாரி கொப்பேகடுவ மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களின் படுகொலைகள் பற்றிய இரகசியங்களை வெளிக்கொணர தற்போது உயிருடன் இருக்கும் - மரணப் படையைச் சேர்ந்த மூவரையும்— கண்டு பிடிப்பது மிக இன்றியமையாத தேவையாக உள்ளது.

இந்த மரணப்படையைச் சேர்ந்த ஒருவர், தான் அறிந்த விடயங்களைத் தனது மனைவிக்குத் தெரிவித்திருந்தாராம்.

காணாமற்போன தனது கணவனைத் தேடிக்கொண்டிருந்தவேளை விசாரணைக் குழுவினிடம் அப்பெண்மணி அகப்பட்டுக் கொண்டார். அப்பெண்மணி தனது கணவன் தனக்குக்கூறிய தகவல்களை விசாரணைக் குழுவிடம் வெளியிட்டுள்ளதால் விசாரணைகளை இலகுவில் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இருப்பினும் மரணப்படையில் தற்போது உயிருடன் எஞ்சியிருப்பதாகக் கூறப்படும் மூவரில் ஒருவரையேனும் விசாரணைக் குழுவினரால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இம்முயற்சியில் விசாரணைக்குழு வெற்றி பெறுமானால், உலகமே வியக்கும் அளவிற்கு படுகொலைகள் பற்றிய செய்திகள் வெளிவர வாய்ப்புண்டு என ''ராவய'' மேலும் தெரிவித்துள்ளது (உ-10)

## இனாமாக வாழைப்பழம்

வலிகாமம் தெற்கு, பெப் 28

வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியினால் வியாபாரிகள் அதை ஒரு ஊக்குவிப்புப் பண்டமாகப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சில வர்த்தக நிலையங்களில் ஒரு குறிக்கப்பட்ட தொகைப் பணத்துக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வோருக்கு ஒரு கிலோ வாழைப்பழம் இனாமாக வழங்கப்படுகிறது.

ஒரு கிலோ வாழைப்பழத்தின் விலை தற்போது மூன்று ரூபாவுக்கும் குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது (சு-152)

# 502 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று தலைமன்னாருக்கு!

## திருப்பி அனுப்பப்பட்டனர்

சென்னை பெப். 28

ஈழத் தமிழ் அகதிகள் 502 பேர் நேற்றுக் காலை ராமேஸ்வரத்திலிருந்து ''எம். விராமானுஜம்'' கப்பலில் புறப்பட்டு தலைமன்னாரை வந்தடைந்தனர்.

அடுத்த மூன்று வாரங்களில் தமிழகத்திலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் நாலாயிரம் பேர் தலைமன்னாருக்கும், நாலாயிரம் பேர் திருகோணமலைக்கும் அனுப்பப்படவிருக்கின்றனர்.

அந்த அகதிகளில் முதல் தொகுதியினரே நேற்று தலைமன்னார் வந்து சேர்ந்தனர்.

இவர்களைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் கண்காணிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-க-4)

# 'சொத்தி' உபாலியின் சகோதரர் சுட்டுக் கொலை!

கொழும்பு, பெப். 28

பிரபல பாதாள உலகக் 'கிரிமினல்' எனக் கருதப்படும் சொத்தி உபாலியின் சகோதரரான இந்திரசிறி என்பவர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கிற்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

'தட்ட சோம' என்பவருடன் மதுபானசாலை ஒன்றை நோக்கிச் செல்லும் போது இனந்தெரியாத துப்பாக்கிநபர்கள் அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது

துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் தட்ட சோம — கொழும்பு அவசர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7)

# பெண் மாலுமியுடன் தகாது நடந்த கடற்படை அதிகாரி!

## பத்திரிகை கிளப்பும் சந்தேகம்

கொழும்பு, பெப். 28

இராணுவத்தைப் பின்பற்றி, இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த பிரதேச கொமாண்டர் ஒருவரும் பெண்மாலுமி ஒருவருடன் நடந்து கொண்ட விதம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தளபதி பெண்மாலுமி ஒருவருடன் காரில் கற்பிட்டி நோக்கிச் சென்றார் என்றும் —

அன்று மாலையே கற்பிட்டி கடற்படைத்தளத்தை அடையக் கூடியதாகவிருந்தும் அந்தத் தளபதி வர்த்தகர் ஒருவரின் வீட்டில் அன்றிரவு தங்கிவிட்டு மறுநாளே கற்பிட்டி சென்றார் என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் பயிற்சி பெறச் சென்ற இராணுவ உயரதிகாரி ஒருவர் இத்தகைய தவறான நடவடிக்கையில் ஈடுபட்டார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. இராணுவத்தின் வழியில் கடற்படையும் செல்கிறதா என்று கொழும்பு வட்டாரங்களில் கேட்கப்படுகிறது. (உ-எ)

# உலகம் இருண்டவருக்கு மீண்டும் கண் பார்வை

யாழ்ப்பாணம், பெப். 28

நேற்று முன்தினம் மனைவி ஒருவர் தானம் செய்த அவரின் கணவரின் கண், கடந்த ஒருவருடமாக உலகத்தைப் பார்க்கமுடியாமல் இருந்த ஒருவருக்கு கண் பார்வை அளித்தது

சுண்டிக்குளியைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்தியரான டினேஸ் சாள்ஸின் கண்களை அவரது மனைவி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரிக்கு தானம் செய்தது தெரிந்ததே.

அவரின் கண்களில் ஒன்று அத்தியடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவசம்பு (73 வயது) என்பவருக்கு நேற்றுப் பொருத்தப்பட்டது.

கண் மாற்றுச் சிகிச்சையை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் மேற்கொண்டார்.

சிவசம்பு கடந்த இருபது வருடங்களாக ஒரு கண் பார்வையை இழந்திருந்தார். கடந்த ஒருவருடமாக அடுத்த கண்ணும் பாதிப்புற்றதால் அவருக்கு உலகம் இருண்டு போனது.

நேற்று கண் மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டதால் அவர் மீண்டும் பார்வை பெறவுள்ளார். (அ-13-15)

# தமிழீழ விடுதலை புலிகளை 'பயங்கரவாதிகள்' என்பதா?

## ரத்வத்தை மீது வாசு பாய்ச்சல்

கொழும்பு, பெப். 28

விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகள்' என்று நாடாளுமன்றத்தில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் ரத்வத்தை தெரிவித்தது, இரத்தினபுரி மாவட்ட எம். பி. வாசுதேவ நாணயக்காரவுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீடு பற்றிய குழுநிலை விவாதத்துக்கு பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் ரத்வத்தை விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகள்' என்று வர்ணித்தார்.

ஆத்திரமடைந்த வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்ற சபா மண்டபத்துக்கு வெளியே 'லொபி'யில் பிரதி அமைச்சரிடம் விரைந்து சென்று, ''புலிகளை பயங்கரவாதிகள் என்று ஏன் கூறினீர்கள்?'' — எனக் கேட்டார்.

அதற்கு கேணல் ரத்வத்தை அப்படி கூறியது கவனக்குறைவால் ஏற்பட்டதவறு என்று பதிலளித்தார்,

ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டது. (உ-எ)

---

சந்திரிகா—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனையை கடுமையாக கடைப்பிடிக்கும்படியும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட இந்த உயர் அதிகாரியின் ஆட்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ளனர் என்றும் —

அவர்களைக் கொண்டு அனைத்து அரசியல்வாதிகளின் நடமாட்டங்களும் கண்காணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த உயர் அதிகாரியும் அவரது ஆட்களும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் அடிக்கடி சென்று வரும் ஹோட்டல்கள் மற்றும் முக்கிய இடங்களிலும் தொடர்புகளை வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி மூலம் தகவல்கள் பிழையானவர்களின் கைகளுக்கு சென்று விடும் ஆபத்து இருப்பதாக அரசு அஞ்சுகின்றது என்று 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக குறிப்பிட்ட உயர் அதிகாரி மற்றும் அவரது ஆட்களின் நடமாட்டங்கள் குறித்து ஒரு 'கண்' வைத்து இருக்கும்படி அரசாங்கம், அரசுக்கு விசுவாசமான அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் தோல்வி காணுமானால் தேசியப் புலனாய்வுப் பணியகத்தைமுற்றாகவே மாற்றி அமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அப்போது குறிப்பிட்ட உயர் அதிகாரி உட்பட பல உயர் ''தலை''கள் உருளலாம் என்று ''சண்டே ஐலண்ட்'' மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ)

---


## பணிநிலை வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து **11-03-1995** வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்

(சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் இருத்தல வேண்டும்.)

1) சத்திர சிகிச்சைத் தாதி **(THEATRE NURSE)**

தகைமை: சத்திர சிகிச்சைக்கூடத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் முன் அனுபவம்.

2) மருந்தாளர் **(PHARMACIST)**

தகைமை: மருந்தாளர் தகைமைச் சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது மருத்துவ மனையில் அல்லது மருந்தகத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய முன் அனுபவம் வேண்டும்.

3) ஆண் பரிசாரகர் **(MALE ATTENDENT)**

தகைமை: க பொ த. (உ/த) பரீட்சையில் சித்தி.
வயது: 28 வயதிற்கு உட்பட்டவர்.

★ விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிநிலை வெற்றிடம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,
**வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை**
17, கண்டி வீதி. சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

[சி-694]


---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் சங்கரலிங்கம் சசிகுமார்

(ஸ்ரீ நந்தி ஆடையகம், யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

சகிக்க முடியாதது!
மன்னிக்க முடியாதது!
உனது மரணம்.
வாசிக்க முன் கிழிந்துபோனதும்,
இசைக்க முன் உடைந்து போனதும்,
சகிக்க முடியாதது!
சின்னக் குருத்தில்
சிதைந்து போனதும்,
வண்ணக் கனவுகள்
தொலைந்து போனதும்,
மன்னிக்க முடியாதது!
காலைச் சூரியன்
கதிர்விட்டது போல் உன் தோற்றம்
மாலைக்கு முன் மறைந்துபோனதும்,
தோளுக்கு மேல் தூரம் கடக்க முன்
வாழும் பயணம் வழியில்
முடிந்து போனதும்,
சகிக்க முடியாதது!
மன்னிக்க முடியாதது!
சசி! சசி!!
உனது மரணம்!

— பேஸ்கோ
மற்றும் நண்பர்கள் —

(சி 696)

---

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சபையின்

## யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

நடத்தும்

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கலும் பதக்கம் அணிவிக்கலும

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம்: 05 — 03 — 1995 ஞாயிற்றுக்கிழமை காலை 9·30 மணி முதல்

தலைவர்: டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா
[தலைவர், யா. மா. அ. மெ. சங்கம்]

பிரதம விருந்தினர்: திரு. கே. பொன்னம்பலம்
(யாழ். அரச அதிபர்)

கௌரவ விருந்தினர்கள்: செல்வி. நிலாவதி பெரியதம்பி
[கல்விப்பணிப்பாளர், கல்வி வலயம் I]

திரு. வே. சுந்தரசாமி
[கல்விப். பணிப்பாளர் கல்வி வலயம் - II]

திரு. வெ. இளங்குமரன்
(பொறுப்பாளர், தமிழீழ கல்விக் கழகம்)

✶ அனைவரும் வருக ✶

செயலாளர்,
யா. மா. அ. மெ. சங்கம்

(சி 692)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட.-கிழக்கில் நிர்க்கதியானோரை மீளக் குடியமர்த்த விரிவான திட்டம்

## நிதி உதவியை மும்மடங்காக அதிகரிக்கவும் முடிவு

கொழும்பு, பெப். 28
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் போரின் காரணமாக வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதியாக அகதி முகாம்களில் வாழும் மக்களை துரித கதியில்மீளக் குடியமர்த்துவதற்கு விரிவான திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிகளை மீளக் குடியமர் தலை ஊக்குவிக்கும் நோக்கமாக அவர்களுக்கான நிதி உதவிகள் மும்மடங்காக அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அகதிகளுக்கு மீளக் குடியேற்றத்தின் போது வழங்கப்பட்டு வந்த முதல் தவணைப் பணம் 500 ரூபாவில் இருந்து 7ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காணியை துப்புரவு செய்வதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்ய இனிமேல் ஓர் அகதிக் குடும்பத்துக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும். இதுவரை இதற்குப் பணம் வழங்கப்படவில்லை.

வீட்டு உபகரணங்களை வாங்க இனிமேல் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

வீட்டை மீளக் கட்டிக் கொள்ள இதுவரை வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபா 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவிருக்கிறது. மேலும் இதற்கு 25 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படும். (ஒ-3)

# சிங்கப்பூரில் தமிழ்மொழி வாரம் ஏப். 8முதல் 15வரை நடைபெறும்

சிங்கப்பூர், பெப். 28
சிங்கப்பூரில் முதன்முறையாக தமிழ்மொழி வாரம் கொண்டாடப்படவிருக்கிறது. சட்ட வெளியுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் பேராசிரியர் எஸ். ஜெயக்குமார் தமிழ்மொழி வாரத்தை ஏப்ரல் 8ஆம் திகதி தொடக்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று சிங்கப்பூரில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டம் ஒன்றில் இது பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன.

"இனிய தமிழில் எந்நாளும் பேசுவோம்"— என்ற கருப்பொருளைக் கொண்ட தமிழ் மொழி வாரம் ஏப்ரல் 15ஆம் திகதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக சிங்கப்பூரிலுள்ள 25அமைப்புகள் ஒன்று சேர்ந்து இந்த வாரத்திற்கு ஏற்பாடு செய்துள்ளன. சிங்கப்பூரில் தமிழ் மொழியின் புழக்கத்தை மேம்படுத்துவதும். அதன் சிறப்பை மேலும் அறிந்து கொள்ளச் செய்வதும் அந்த வாரத்தின் முக்கிய நோக்கங்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் தமிழ் பேசுவோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஆகும். இவர்களில் 50 சதவீதமானோர் இளம் தலைமுறையினரை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இவர்களிடையே தமிழ்ப் புழக்கத்தை வலியுறுத்த தமிழ் மொழி வாரம் உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக புகுமுக வகுப்புக் கருத்தரங்கு தமிழ்மொழிப் போட்டிகள், சொற்போர், பாரம்பரிய கலை நிகழ்ச்சி, சமூக கலை நிகழ்ச்சி ஆகியவை தமிழ் மொழி வாரத்தின் போது இடம்பெறவிருக்கின்றன. (எ-4)

## புத்தளத்தில் சமாதான பேரணி

கொழும்பு, பெப்.28
போரை நிறுத்துமாறு கோரும் பேரணிஒன்று நேற்று முன்தினம் புத்தளத்தில் நடைபெற்றது.

இப்பேரணியை புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த வெகுஜன அமைப்புக்கள் ஒழுங்கு செய்திருந்தன.

இப்பேரணியில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 40பேரும் பங்கு பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, பெப். 28
"யாழ். குடாநாட்டில் எழும் சமூக மாற்றங்களும், சனசமூக நிலையங்களின் பங்களிப்பும்" என்ற தலைப்பிலான நூலை யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரான திரு. இ. தவகோபால் அண்மையில் வெளியிட்டு வைத்தார். (க-30)

## அமோனியா உரம் விநியோகம்

வட்டுக்கோட்டை, பெப். 28
வலி. மேற்கு கமநல சேவை நிலையத்தில் அமோனியா உரம் விவசாய அடையாள அட்டை வைத்திருப்போருக்கு விநியோகிக்கப்படுகிறது.

## புலிகளின் குரல் வானொலியில்

28 — 02 — 1995
செவ்வாய் இரவு
★ 8-01—பெப்ரவரி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— சி. கண்ணம்மா எழுதிய "நிலைத்து வாழும் நினைவுகள்"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 —கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய "தடுமாற்றம்"
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

01 — 03 — 1995
புதன் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

செவ்வாய் மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி தமியூகம் — 09
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — இவ் வாரம் இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

## பதிவுசெய்ய வேண்டுகோள்

தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்து கொள்ளாத விளையாட்டுக் கழகங்கள் பிரதேச வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது எனவும்— எனவே வலி. மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் சகல விளையாட்டுக் கழகங்களையும் பதிவு செய்து கொள்ளுமாறும் வலி. மேற்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க-12)

# யாழ். ஆயருக்கு உதவிய யோசவ்வாஸ் அடிகள்

யாழ்ப்பாணம், பெப். 28
கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கான வரவேற்பு நிகழ்வின் போது தமக்கு யோசவ் வாஸ் அடிகள் உதவியதாக யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் கூறினார்.

கொழும்புத் துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற யோசவ்வாஸ் நன்றி விழாவின் போது ஆயிரக் கணக்காகக் குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஆயர் இதை சுவைபடக் கூறினார். ஆயர் கூறியதாவது:

பாப்பரசரை வரவேற்க கொழும்புக்குச் சென்றோம். இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களின் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தும் கடமை என்னிடம் வழங்கப்பட்டது. பாப்பரசரின் வருகையை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நாங்கள் சென்ற பஸ் காலிமுகத்திடலை அடைந்ததும் நான் அவசரமாக இறங்கிக் கொண்டேன். நான் தயாரித்திருந்த வரவேற்புரையை பஸ் வண்டியுள் தவறவிட்டுவிட்டேன்.

வரவேற்புரையைத் தவறவிட்ட சம்பவத்தை தெரிந்து கொண்டதும், இனி என்ன செய்வது என்ற நிலையில் பக்கத்தில் இருந்த ஒரு குருவிடம் இதுபற்றிக் கூறி, என்ன செய்ய என்றேன். அவரோ, "பாதுகாப்புக் கடுமையாக இருக்கிறது போகமுடியாது என்றார்.

பாப்பரசரின் பவனியும் வந்து கொண்டிருந்தது. "எல்லாம் முடிந்தது தோமஸ் ஆண்டகை இனிச் சரி" என்று நினைத்தேன். பக்கத்துக் கடல் காற்றிலும் கூட வியர்த்து விறு விறுக்கத் தொடங்கி விட்டது.

எனது அவல நிலையைக் கண்டு ஒரு பாதுகாப்பு அதிகாரி வந்தார். அவரிடம் நான் விடயத்தைச் சொன்னேன். நேரமோ நெருங்கிக் கொண்டிருக்கிறது. பவனியும் வந்து கொண்டிருந்தது.

"யோசவ்வாஸ் முனிவரே நீர் எத்தனை விலங்கத்துள் போனீர். இந்த நேரம் எனக்கு நீர்தான் உதவி செய்ய வேண்டும்" என்று நினைக்க பாப்பரசரின் பவனியும் வந்து விட்டது. அதேவேளை எனது அவலத்தைப் பார்த்த பாதுகாப்பு அதிகாரியும் ஓடி வந்து வரவேற்புரைத் துண்டையும் எனது கையுள் வைத்தார்.

"யோசவ் வாஸ் முனிவரே நீர்சக்தி வாய்ந்தவர்" என்று நன்றியோடு சொல்லி பத்தியால் இறைஞ்சி எனது வரவேற்புரையையும் மகிழ்வுடன் நிகழ்த்தினேன்.

ஆயர் இச் சம்பவத்தை மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியில் கூறினார். [க-111]

## வடக்கு - கிழக்கு பாடசாலைகளின்

# மாணவ தலைவர்களுக்கென 4 நாள் பயிற்சிக் கருத்தரங்கு

### மார்ச் 3 முதல் திருகோணமலையில்

கொழும்பு, பெப். 28
வடக்கு — கிழக்கு பாடசாலை மாணவ தலைவர்களுக்கான நான்கு நாள் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கின்றது.

எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் இந்த பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிக் கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்கென முதற்கட்டமாக 25 தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். முகாமைத்துவம், ஆளுமை விருத்தி, தலைமைத்துவ பண்பு மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு முதலான தலைப்புக்களில் இந்தக் கருத்தரங்கில் விரிவுரைகள் நிகழ்த்தப்படுமென தெரியவருகின்றது.

மேலும் இதே போன்று இரண்டாம் கட்டமாகவும் 25 மாணவ தலைவர்களுக்கு மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்பட உள்ளது. (எ-4)

# காமினி கொலைவிசாரணை: இந்தியக் குழுவினர் திருப்தி

## சிறிமாவை சந்தித்து தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28
காமினி திஸநாயக்காவின் படுகொலை தொடர்பான விசாரணைகளில் இலங்கை பொலீஸாருக்கு உதவுவதற்காக கொழும்பு வந்திருந்த இந்திய துப்பறியும் நிபுணர் குழு திருமதி சிறிமா திஸநாயக்காவைச் சந்தித்துப் பேசியது.

இக் கொலை தொடர்பாக இலங்கைப் பொலீஸார் இதுவரை நடத்திய புலன்விசாரணை குறித்து இந்தியத் துப்பறியும் நிபுணர்கள் அச் சமயம் திருப்தி தெரிவித்தனர்.

இக் கொலையைச் செய்ததாகக் கூறப்படும் மனித குண்டாகச் செயற்பட்ட பெண்ணின் தலை சிதைவுற்றிருப்பதால் அது விசாரணையின் சகல அம்சங்களையும் பாதித்துள்ளதாக இந்தியக் குழுவினர் தெரிவித்தனர்.

இலங்கைப் பொலீஸாரிடம் இருந்து இக் கொலை தொடர்பாக மூன்று முக்கிய அறிக்கைகளைப் பெற்றுக் கொண்ட இந்திய நிபுணர் குழு, தொடர்ந்து நடத்தும் விசாரணைகளுக்கு உதவக் கூடிய சில ஆலோசனைகளையும் அவர்களுக்கு வழங்கியது.

மூன்று நாட்கள் கொழும்பு தங்கியிருந்த இக் குழுவினர் இக் கொலை சம்பந்தமான சில வீடியோ படங்களையும் பார்த்தனர். இக் குழு கடந்த வியாழக்கிழமை இந்தியா திரும்பியது. [எ-4]

# விடுதலைப்புலிகள் தலைவரை இலகுவில் ஏமாற்ற முடியாது

அரசு குறித்து விடுதலைப் புலிகளின் மனப்பாங்கு, அரசின் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பன தொடர்பாக கனடாவிலிருந்து வெளியாகும் "எரிமலை" என்னும் மாத சஞ்சிகையில் கட்டுரையொன்று வெளியானது. அக் கட்டுரை சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பட்டு 12—2—95 ஞாயிறு "லங்காதீப" சிங்களப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

நான்காண்டுகளுக்குப்பின்னர் சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உத்தியோகபூர்வ முறையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வாறான சமாதானப் பேச்சுக்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எந்தவொரு சமாதானத் தீர்வும் எட்டப்படாவிடினும் சந்திரிகாவின் அரசுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சமாதானப் பேச்சுக்கள் ஒரு புதிய வடிவத்தைக் கொண்டுள்ளன.

இனப்பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறிப் பிரசாரங்களை மேற்கொண்டு தமிழ்மக்களுக்கு எதிராக அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்ட விஜயதுங்காவின் அரசிற்கு முற்றிலும் மாறுபட்ட அரசாக சந்திரிகாவின் அரசு காட்சியளிக்கிறது.

கடந்த நான்காண்டு காலமாக விடுதலைப் புலிகள் வெளியிட்ட கருத்துக்களைக் கவனத்திற் கொண்டு பேச்சு வார்த்தைகளின் மூலம் அமைதிப் பாதையை வகுக்கும் நோக்கில் தடை செய்யப்பட்ட பொருள்கள் மீதான தடையை தளர்த்தியதாலும் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிக அக்கறை காட்டுவதன் மூலமும் இந்த அரசு தமிழ்மக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இம் முயற்சிக்குத் தென்பகுதியில் எதிர்ப்புக்கள் தோன்றாமலிருப்பதும் சமாதானம் சாத்தியமாவதற்கு ஒரு வாய்ப்பாகும். இருப்பினும் தென்பகுதி மக்களின் ஒத்துழைப்பு எவ்வளவு தூரத்திற்கு நிலைத்திருக்கும் என்பது சந்தேகமே. தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படும்போது இன்று சமாதானம் குறித்து கிடைக்கும் அனுசரணைகள் சற்றும் மாறாமல் தொடர்ந்தும் கிடைக்குமா என்பதே சந்தேகத்திற்கான காரணமாகும்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கருத்திற்கு அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது

### தமிழர் மனம் கவர அரசுத்திட்டம்

விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் மற்றும் உலகின் முன் தனக்குச் சாதகமான கருத்துக்களை முன்வைக்கும் நோக்கில் குறிப்பாக தமிழ் மக்களின் மனங்களைக் கவரும் நோக்கில் அரசு தனது திட்டங்களைத் தயாரித்துள்ளது.

நான்கு ஆண்டுகளாக வட பகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைக்கவோ தமிழர்களின் விடுதலைப் போராட்டம் குறித்த தமிழ் மக்களின் விருப்பத்தை சிதறடிக்கவோ முடியவில்லை.

வரலாறு காணாத வகையில் விடுதலைப் புலிகளுக்கு வெற்றியைத் தேடித் தந்த பூநகரிச் சமர் புலிகளின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறது. கடந்த அரசினால் அமுல்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை தமிழ் மக்களை சிங்கள தேசத்திலிருந்து தனிப்படுத்துவதற்கே வழிகோலியது.

பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி ஜனாதிபதி சந்திரிகா இன்று ஒரு நல்ல சூழ்நிலையைத் தோற்றுவித்த போதிலும் நாற்பதாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் போல் கவனிக்கப்பட்டு வந்துள்ளதால் ஒரு சந்தேகக் கண்ணுடனேயே எதிர்காலத்தையும் நோக்க வேண்டியுள்ளது.

### ராணுவத்தின் எதிர்ப்பு

சந்திரிகாவின் சமாதான முயற்சிகள் தொடர்பாக பாதுகாப்புப் படையினர் மத்தியில் அதிருப்திகள் மலிந்துள்ளன. சந்திரிகா ஆட்சிக்கு வந்து படையதிகாரிகளைச் சந்தித்த முதலாவது சந்திப்பின்போது இந்த எதிர் உணர்வுகள் வெளியாகின. பொருளாதாரத் தடையை நீக்க இராணுவம், இணங்க மறுத்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசிற்கும் படையதிகாரிகளுக்குமிடையேயான கருத்து முரண்பாடுகள் பற்றிய தகவல்கள் ஜனாதிபதி பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியின் மூலம் தெரிய வந்தன.

முன்னைய அரசு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்ட அராஜகத்தை செயற்படுத்தி வந்த சிறிலங்கா இராணுவம், இன்று நாட்டின் அரசிற்கு எதிராகச் செயற்படுமளவிற்கு ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழ் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேட முற்படும்போது இராணுவம் இவ்விதத்தில் எதிர்ப்பைத் தெரிவிக்குமாயின் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளும் போது பயங்கரமான ஒரு சூழ்நிலை தோன்ற பெருமளவில வாய்ப்புண்டு.

இன்று அமைதியாக இருக்கும் வகுப்புவாதிகள் தீர்வொன்று எட்டப்படும்போது அதற்கு எதிராக எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் சமூகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தவும் முயற்சிக்கக் கூடும். தமிழ் மக்களின் போராட்டத்தைத் தவறான கோணத்திலிருந்து பார்ப்போரும் தீர்வுக்குத் தடையாயிருப்பர்.

### இந்தியாவின் செயற்பாடு

ஈழத்திலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வு காணப்படக்கூடாது என்ற ஒரே கவலையில் இந்தியா செயற்பட்டுவருகிறது தமிழ் மக்கள் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ அனுமதிக்கும் விதத்தில் இந்தியா செயற்படவில்லை.

இந்தியாவிலுள்ள பல்வேறு [illegible] களின் விடுதலைப் போராட்டத்தை [illegible] மாகக் கொண்டு தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே ஈழத் தமிழர்கள் விடயத்தில் இவ்வாறு இந்தியா செயற்படுகிறது அவ்வாறான இந்திய அரசு எதிர்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இடமளிக்கும் என நம்புவது கடினம். சிங்கள வகுப்புவாதத்தை ஓரங்கட்டி. வெளியாரின் தலையீடுகளுக்குத் தாக்குப் பிடித்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்றினை ஜனாதிபதி சந்திரிகா முன்வைப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தமிழரை அடிமைகளாக்க முயன்றால் அவர்கள் எரிமலையென எழுவர்

தாயகம், தமிழ்ப் பிரதேசம், சுயாட்சி உரிமை ஆகிய தமிழ் மக்களின் கோரிக்கைகளை பிரதிபலிக்கும் விதத்தில் தீர்வினை முன்வைத்து மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவாரேயாகில் சிறிலங்காவின் வரலாற்றில் மனங்கவர்ந்த தலைவியாக சந்திரிகா புகழடைவார். இதற்கு மாறாக தமிழ் மக்களை அடிமைகளாக்க முயற்சிப்பாராயின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் சிறிலங்கா அரசின் பிரதிநிதிகளை வரவேற்ற அதே மக்கள் எரிமலையெனக் குமுறுவர். கடந்தகால நிகழ்வுகள் இதற்குப் பொருந்தும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இலகுவாக ஏமாற்றமுடியாது. மக்களின் ஒத்துழைப்பில்லாமல் இந்தக் கெரில்லா இயக்கத்தை நடத்தமுடியாது என கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சிக்கமாட்டார் என நம்புகிறோம். (இ-10)

# சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் காணிகள் கையளிப்பு

வலிகாமம் தெற்கு, பெப். 28
வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச அலுவலர் பிரிவில் சுவர்ணபூமி காணி அளிப்புத் திட்டத்தின் கீழ் 23 குடும்பங்களுக்கு காணிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

காணிகள் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட மேலும் பதின் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட நாளில் சமுகமளிக்கத் தவறியமையால் அவர்களுக்கான காணிகள் கையளிக்கப்படவில்லை.

மேலும், இப்பிரிவில் உள்ள காணிகளில் அத்துமீறி குடியேறி வசிப்போர் சம்பந்தமாக ஓர் அறிக்கை வடக்கு-கிழக்கு மாகாணக் காணி அமைச்சுக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் குடியேற்ற உத்தியோகத்தர் திரு. பொ. இலங்கநாதபிள்ளை தெரிவித்துள்ளார். (இ-14-152)

# சந்திரிகா மார்ச் 5 இல் திருகோணமலை விஜயம்

கொழும்பு, பெப். 28
திருகோணமலை மாவட்டத்தில் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள கப்பல் துறை மாதிரிக் கிராமத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி திறந்து வைக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியிலிருந்து கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். அஷ்ரப்பும் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கிராமத்தில் முன்பு வாழ்ந்த மக்கள் 1990 இல் வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்திருந்தனர். (எ)

# நாய்க்கடிக்கு ஆளாவோர் யாழ். குடாவில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ். குடாநாட்டில நாய்களினால் கடிபடுபவர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரித்து வருவதாக யாழ். ஆஸ்பத்திரி பதிவேடுகளில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 3 ஆயிரது 100 பேர் நாய்களினால் கடியுண்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 236 பேர் விசர்நாய்க் கடிக்கு ஆளாகியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் இவ் வாண்டின் முதல் இரு மாதங்களிலும் சுமார் 622 பேர் நாய்க் கடிக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களுள் 45 பேர் விசர் நாய்களால் கடியுண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [எ-5-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**காவேரி சீயாக்காய் பவுடர்**

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனம், 80% சீயாக்காயும், 20% இயற்கைப் பொருள்களும், சேர்த்து தயாரிப்பது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல், காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் கிடைக்கும். [34909]

**அக்கரைச் சீமையில**

250 நாடகங்களை எழுதி ஆயிரம் பாத்திரங்களைப் படைத்த அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நாவல் இலங்கைத் தமிழ் மக்களது இன்றைய வாழ்க்கை முறையின் ஓர் அம்சத்தைச் சித்தரிப்பது. 103 பக்கங்கள். ]35281]

**மாணவர்கள் கவனத்திற்கு**

விற்பனையாகின்றது: புதிய பாடநூல் நாமும் சுற்றாடலும் ஆண்டு 2 விளக்கப்படங்களுடன் கூடியது. 1994 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 2க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8354)

விற்பனையாகின்றது: புதிய செயல் நூல் தமிழ் மொழி ஆண்டு 1, ஆண்டு 2 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள முதல் மொழி - தமிழ் - பாடத்திட்டத்தின் ஆறுவிடயப் பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. கேட்டல் — கிரகித்தல், பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடுகள், பேச்சு மூலம் வெளிப்பாடு, வாசிப்பு, எழுத்து. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8355)

**AVAILABLE**

Astrological Magazine by B. V. Raman. World trends and tensions in 1995-1996. 1995 Annual Number available Poobalasingham Book Depot, Jaffna. (சி-392)

**தேவை**

கடைக்கு பாவிக்க உகந்த நல்ல நிலையிலுள்ள கண்ணாடி அலுமாரி தேவை. சுமார் 8 அடி உயரம் 12 அடி நீளம். தொடர்பு கொள்ளவும். விசுவநாத பிள்ளை (அல்லை) S. R. S. கட்டடம், சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். [35426]

**ரி. வி. டெக திருத்துதல்**

சகல றேடியோக்களையும், ரி. வி. டெக், எல்லாவித மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டிலகா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

**தவறிவிட்டது**

23-2-95 இல் கிளாலியில் பஸ்ஸில் ஏறும் பொழுது பெறுமதியான உடுப்புகள், அல்பங்கள், மருந்துகள் அடங்கிய இரண்டு கறுப்பு நிற பைகள் கொண்ட உரப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி எம். ஜேம்ஸ், இல. 71, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (35427)

**இலகு திருமண சேவை**

32 வயது. அனுஷம், செவ்வாய் 4, Aircraft Engineering Diploma Technician வேலை புரிந்தவருக்கு மணப்பெண் தேவை. அவுஸ்திரேலியா வேறு நாடுகளிலிருந்து Sponsering விரும்புகிறார் து. விமலா, யாழ்/ நாச்சிமார் கோயிலடி. (35425)

**காணவில்லை**

25-2-95 பின்னேரம் சுன்னாகம் சென்ற த. ஜெயக்குமார் வயது 19 இன்னும் வீடு திரும்பவில்லை நீல அரைக் காற்சட்டையும், பச்சை ரீ ஷேர்ட்டும் அணிந்திருந்தவர். இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் த. நடராசா, பிள்ளையார் கோயிலடி, தாவடி முகவரிக்கு தெரிவிக்கவும். (35422)

**மணமக்கள் தேவை**

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 763, சே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

## சந்நிதிக்கு வெள்ளி தோறும் மினிபஸ் சேவை

வடமராட்சி, பெப். 28

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில் பக்தர்களின் வசதி கருதி பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சிற்றூர்திச் (மினிபஸ்) சேவை நடத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமைகளில் காலை 7 மணிக்கும் 10 மணிக்கும் நெல்லியடியிலிருந்து சந்நிதி கோயிலுக்கு பஸ் சேவை நடக்கும்.

பயணி ஒருவரிடம் ஒருவழிக் கட்டணமாக 10 ரூபா அறவிடப்படுகிறது. (ஓ137-)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**கந்தசாமி ஜெபிச்சந்திரன்**

[ஜெபி]

(முன்னாள் செயலாளர், யா/வண் வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம்)

மலர்வு: 13—10—1968

உதிர்வு: 11—03—1994

திதி: 28 – 02 – 1995

உன் நினைவால் உள்ளம் உருகுதையா
கருணை முகம் காணாமல் கண்கள் கலங்குதையா
உனைப் பிரிந்த ஓராண்டு காலமும் எங்களுக்கு
ஒரு யுகம் போல் தோன்றுதையா
குடும்பத்தின் அணையாத ஜோதியாய்
வந்துதித்த மாசற்ற மாணிக்கமே
பெற்றமனம் வேகி பித்தாய் கரைந்தோட
சகோதரர்கள் உனை நித்தம் நினைந்து நெஞ்சுருக-நீ
பாசத்தை மறந்து பாதியிலே சென்றதேனோ?
ஓராண்டு சென்றிடினும் மாறாது உன் பாசம்
பல ஆண்டுகள் சென்றிடினும் மறையாது உன்-நினைவு

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;
அம்மா, சகோதரர்கள்,
அண்ணிமார், பெறாமக்கள்,
நண்பர்கள்.

211/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8250)

## 2 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்: 02 — 01 — 1937

திருநீழல்: 19 — 02 — 1993

**கந்தையா சண்முகநாதன்**

திதி: 28 – 02 – 1995

நமச்சிவாய வா அழ்க
நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க.

மனைவி, பிள்ளைகள்.

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (35393)

## ★ இடம்மாற்றம் ★

**மருத்துவ ஆய்வு கூடம்**

**CHAVA MEDILAB**

சாவகச்சேரி

சில வருடங்கள் கச்சாய் வீதி, டாக்டர் சிங்கராச மருத்துவ நிலையத்திலும், பின் சில மாதங்கள் 212, கண்டி வீதியிலும் இயங்கிய எனது மருத்துவ ஆய்வு கூடம்

நாளை **01-03-1995** தொடக்கம்

**திரு. தர்மேந்திரா (J P.) இல்லத்தில் (டச்சுவீதி - சாவகச்சேரி)**

இயங்கும் என்பதை அறியத் தருகின்றேன்

வேலை நேரம் காலை **8-30** — பி.ப. **1-30** வரை

மு. குமாரசாமி (M L. T.)

[35414]

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

**4 MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: **05 - 03 - 1995** 8-30 மணி

Lectures By:
S. P. Sivapathasundaram
M. I. D. P. M (London)

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே.
★ அச்சடித்த பாடக்குறிப்பு.
★ கூடிய செய்முறைப் பயிற்சிகள்.
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.
★ Lotus 1 - 2 - 3, Short-Hand & Typing

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)

16, 3rd CROSS STREET, JAFFNA.

[சி-690]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 05 — 02 — 1966

ஆண்டவன் பறிப்பு: 28 — 02 — 1988

**அமரர் துரைசிங்கம் சுதிகரன்**

அன்பு பாசம் அனைத்திற்கும் மூன்றெழுத்தாம்
பிரிவு மதில் அடைக்கலமாம்
நில்லாது நிமிராது எமைக்காக்க உழைத்தாய்
காலத்தின் கோலத்தால் எமைப் பிரிந்தாயே!

என்றும் உன் நினைவுடன் வாழும்;
— குடும்பத்தினர்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [35428]

## 6-ம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 07 — 1947

மறைவு: 04 — 09 — 1994

அமரர்

**இரத்தினகோபால் தியாகரத்தினம்**

(தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம் - செங்கலடி)

நேற்றுவரை எங்கள் வாழ்வில் வழியாய் நின்றீர்
நிழற்படமாய் இன்று எங்கும் ஒளியாய் ஆனீர்!
ஏற்ற மிகு வாழ்வெமக்கு அளித்தே நின்றீர்
எங்கள் அன்புத் தெய்வம் நீர் எங்கே சென்றீர்?
தேற்று வார்கள் யாரும் இன்றி துவண்டே நின்றோம்
தேம்பியழு தழுது தேடுகின்றோமே!
போற்றும் வகை - வாழ்வுதந்து - புகழே கொண்டீர்
போற்றும் ஈசன் தாழடைந்து நிறைவே காண்பீர்
நன்றி

தாய்,
சகோதர, சகோதரிகள்,
பிள்ளைகள்.

[illegible] ஒழுங்கை,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (35419)

## கடற்றொழில் ஆலோசனைச்சபைக்கு யாழ். மாவட்டத்திலிருந்தும் உறுப்பினரை நியமிக்குக!

''கடற்றொழில் அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ள, கடற்றொழில் ஆலோசனைச் சபைக்கு யாழ். மாவட்டத்திலிருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் திரு. த. சுந்தரலிங்கம், கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடற்றொழில் ஆலோசனைச் சபைக்கு யாழ். மாவட்டத்திலிருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டால் தான் யாழ். மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள், கஷ்டங்கள் என்பன அரசுக்கும் பிற அமைப்புகளுக்கும் தெரிய வரும் எனவும் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [எ-5-173]

## இறால் வலையில் சிக்கிய ஏ. கே. 47!

கொழும்பு, பெப். 28

திருகோணமலையில் உள்ள லிங்கநகர்ப்பகுதியில் இறால் பிடிப்பதற்காக வீசப்பட்ட மீன்பிடி வலையில் ஏ. கே.47 ரகத்துப்பாக்கி ஒன்று சிக்கியது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது!

லிங்கநகர்ப்பகுதி கடலில் இறால் பிடிக்க வீசப்பட்ட வலையில் இறாலுக்கு பதிலாக தன்னியக்க ஏ. கே. 47 ரகத் துப்பாக்கி ஒன்று சிக்கியதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிறுவனங்களின் ஊழியர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று பல நிறுவனங்களின் ஊழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பெருந்தொகையான பணம் பிரபல ஹோட்டல்களில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள், உரையாடல்கள், மற்றும் விசேட சுற்றுலாக்கள் என்பவற்றுக்கு விரயம் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய இந்த வெளிநாட்டுக்கடன்கள், அவை பெறப்பட்டமைக்கான உரிய நோக்கங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## பாப்பரசர் விஜயத்தின் வீடியோப் படக்காட்சி

### பங்குகள் தோறும் காட்டப்படும்

வடமராட்சி, பெப். 28

புனித பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பான வீடியோ படக்காட்சி யாழ். மாவட்டத்தில் கத்தோலிக்க பங்குகள் தோறும் காண்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அவ்வப்பகுதி பங்குத் தந்தைமார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பாப்பரசரின் இலங்கை விஜய வீடியோ கஸெட்டை விற்பனை செய்து வருகின்றது. (ஓ-173)

## குழந்தை சமுதாயத்தினது மகிழ்ச்சியின் சின்னமாகும்

### பாப்பரசர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் பெப். 28

''ஒரு குழந்தை தன் பெற்றோரினது திருச்சபையினதும் மாத்திரமன்றி சமுதாயத்தினதும் மகிழ்ச்சிக்கு சின்னமாய் அமைகின்றது என்பது உண்மை''.

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் குடும்ப ஆண்டு இறுதியில் குழந்தைகளுக்கென எழுதிய மடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல்வேறு பாகங்களிலும் இருக்கும் அநேக குழந்தைகள் துன்புறுகின்றனர் என்பதும், அச்சுறுத்தப்படுகின்றனர் என்பதும் உண்மையே அவர்கள் பசியிலும் வறுமையிலும் வாடுகின்றனர். பிணியிலும் போசாக்கின்மையாலும் சாகின்றனர். போருக்கு பலியாகின்றனர்.

தங்கள் பெற்றோரால் கைவிடப்பட்டு பிறப்பகம் அற்றவர்களாயும், தங்கள் சொந்த குடும்பத்தின் அரவணைப்பின்றி வாழவும் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எத்தனையோ குழந்தைகளின் துன்பங்களை நாம் காணும் பொழுது நாம் எப்படி அக்கறை கொள்ளாதிருக்கக் கூடும்?

இவ்வாறு பாப்பரசர் எழுதிய மடலில் கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-க-17)

## 40ஆவது பிறந்த தினத்தில் 108ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 28 — 02 — 1955

உதிர்வு: 03 — 10 — 1994

திருமதி

**இரத்தினசிங்கம் இந்திராணி**

(ஏழாலை வடக்கு)

பாசத்தின் துணையோடு பறந்து
சென்ற - மகளே!
பண்பே உருவாவ
எம்மருமை அம்மாவே!
இல்லறத்தில் இணையிலா
எனதினிமை கண்மணையே!
வாழ்க்கைக்கு ஒளிதந்த
எனதுயிர் அக்காவே!
ஏதும் சொல்லாமல் எம்மை
விட்டுப்பிரிந்த புதிர்தான்
என்னவோ?

புரியாமல் தவிக்கும்:
தகப்பன், தாய்,
கணவன், பிள்ளைகள்,
மச்சான், சோதரி.
[டென்மார்க்)

ஏழாலை வடக்கு, (8261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மக்கள் மீது அதிரடி ஏன்?

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கு (பேக்கரிகளுக்கு) பாண் வாங்குவதற்காகச் சென்ற பாவனையாளர்களுக்கு— பொதுமக்களுக்கு— நேற்று அது கிடைக்கவில்லை.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஞாயிற்றுக்கிழமை செய்த திடீர் முடிவைத் தொடர்ந்து வெதுப்பகங்களுக்குச் சென்ற பலர் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று அவர்களில் பலர் பட்டினியும் கிடக்க நேர்ந்தது!

பாண் தயாரிப்பு இடைநிறுத்தம் நீடிக்காமல் தடுக்கப்பட்டது மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். அது வரவேற்கக் கூடியதே. ஆனால் இரண்டு நாள்களாக மக்களுக்குப் பாண் இடைக்காமல் போனமைக்கு யார் காரணம்? பொறுப்பாளிகள் யார்?

மாவுக்குப் பற்றாக்குறை, தவறு, அசமந்தம், அதிகாரத்தனம் என்பன எங்கேயும் எவரிடமும் இருந்திருக்கலாம். அதற்கான காரணங்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் சம்பந்தப்பட்ட அவரவரைப் பொறுத்தவரையில் சரியாக இருக்கலாம்; பிழையாக இருக்கலாம். ஆனால் அவர்களது உள்வீட்டுச் சண்டைக்காக மக்களைத் தண்டிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை!

இது விடயத்தில் சமூகப் பொறுப்பு இல்லாமல், மக்கள் நலனை முன்னிறுத்தாமல், செயற்பட்டு இரண்டு நாள்கள் மக்களின் வயிற்றில் அடித்த யாழ். உணவுத் திணைக்களம், உணவு உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி, அவரின் மேலதிகாரியான அரசாங்க அதிபர், வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினர் ஆகிய சகல தரப்பினரும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

தமது உள்ளகப் பிணக்குகளை வைத்துக் கொண்டு, ஒன்றுமறியா அப்பாவிப் பாவனையாளர்களைப் பட்டினி போட்ட கூட்டுப் பொறுப்புள்ள இவர்களது நடத்தையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மக்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென இத்தகைய நடவடிக்கையில் இறங்கியமைக்காக இவர்களைத் தண்டிப்பது யார்? ஆராய்ச்சி மணி ஒன்று இங்கில்லை என்பதால், எல்லோரும் மக்களை இவ்வாறு திடீர் திடீரெனத் தண்டிக்கத் தொடங்கி விட்டால்?

பாணை தமது முக்கிய உணவுப் பொருளாக்கியமைக்காக மக்களை இப்படித் தண்டிக்க வேண்டும் என்று அதிகாரிகளும், வெதுப்பக உரிமையாளர்களும் சேர்ந்து முடிவு எடுக்க முடியாது!

அவசர வாழ்க்கை, விறகுத் தட்டுப்பாடு, சிக்கன விலை ஆகிய காரணிகளினால் பாண் பாவனை அதிகரித்துள்ளது என்பது உண்மையே. அதனால் 1990 இல் ஆயிரம் மெற்றிக் தொன்களாக இருந்த கோதுமை மாவின் தேவை, இப்போது மூவாயிரம் தொன்களாக அதிகரித்திருக்கிறது. அரக்கன் போன்ற உள்ளூர் தானியங்களிலிருந்து, வாங்கியவுடன் உண்ணக் கூடிய பாண் போன்ற பண்டம் ஒன்றைத் தாயாரிக்க முடியாமல் இருக்கும் பெருங் குறைபாடு ஒருபுறம்.

தனியார் துறையினர் மாவைத் தருவித்து நியாய விலையில் விற்க முடியாதவாறு பொருளாதாரத் தடையும், போக்குவரத்துத் தடையும், தடுக்கின்றன. செயலகம் — உணவுத் திணைக்களம் — மட்டுமே கப்பலில் கோதுமை மாவைத் தருவிக்கிறது. அதனை மனதிற்கொண்டு தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக மேலதிக கையிருப்பு [Buffer Stock] வைத்திருக்க ஒழுங்கு செய்யாதது ஏன்?

அரசு அதற்கு ஏற்பாடு செய்ய முன்வரவில்லை என்றால் அதனை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தி, மக்கள் மீது அதிரடி போடாமல் தவிர்த்திருக்கலாமே!

யாழ்ப்பாணத்தில் புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு அவசரப்படும் அரசு, யாழ். மக்களைப் பட்டினி போடுகிறது என்ற செய்தி வெளியாருக்குச் சொல்லப்பட வேண்டிய வேளை இது'

# வடக்கே முன்னர் 500 லொறிகள்; இப்போது 20 மட்டுமே வருகின்றன

### யாழ். வந்த சமாதானக் குழு தகவல்

கொழும்பு, பெப். 28

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் பொருள்களை விடுதலைப் புலிகள் பதுக்குகிறார்கள் என்று கொழும்பில் பரவலாகப் பேசப்படுகிறது. இதில் எந்தவித உண்மையும் இல்லை முன்னர் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தினமும் 400 முதல் 500 வரையிலான லொறிகள் பொருள்களைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டன. தற்பொழுது நாளொன்றுக்கு 20 லொறிகளே அனுமதிக்கப்படுகின்றன.

சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சமாதானக் குழுவினர் ஐ. ரி. என். தொலைக் காட்சிச் சேவையில் நடத்திய சமாதானப் பயணம் பற்றிய கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் பல தடவைகள் மீறி விட்டனர். என்று தென்பகுதியில் செய்திகள் தெரிவித்தன. இது தவறு என்றும் சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

''எமது சமாதான குழு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படுகையில் வன்னி பிரிகேடியர் பல்லேகல பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மத குருமார்களைக் கொண்டு எமது பயணத்துக்கு ஆசீர்வாதமளிக்கும் மதச் சடங்கை ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தினர் அப்போது விடுதலைப் புலிகள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறவில்லை. பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். அதற்கான எமது நன்றியை விடுதலைப் புலிகளின் தலைவர்களிடம் தெரிவித்து விடுங்கள் என எம்மிடம் கோரிக்கை விடுத்தார் என்றும் சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

அப்போதுதான் விடுதலைப் புலிகள் பற்றிய திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் தென் பகுதியில் பரப்பப்பட்டு வருகின்றன என்பதை நாம் உணர்ந்து கொண்டோம் என்றும் சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

கடந்த 17 ஆம் திகதி இரவு ஐ. ரி. என். தொலைக்காட்சி சேவையில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் திரு. வாசுதேவ நாணயக்காரவை. பி. டி. சில்வா, பேராசிரியர் ஜெயதேவா உயன்கொட, பாரத் லக்ஷ்மன் பிரேமச்சந்திர ஆகியோர் பங்குபற்றினர்.

கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விவரங்கள் வருமாறு:

★ தற்போதைய அரசு பொருளாதாரத் தடை தொடர்பாக மீளாய்வு ஒன்றை செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்துவதாக சொல்லிக் கொண்டு யாழ். மக்களை வேதனைப்படுத்தக் கூடாது.

★ பொருளாதார தடைகளால் பாதிக்கப்படுபவர்கள் யாழ்ப்பாண அப்பாவி மக்கள் தான். விடுதலைப் புலிகளிடம் போருக்கு தேவையான அனைத்துப் பொருள்களும் பல வருடங்களுக்கு தேவையான அளவில் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் வாகனங்கள் டீஸலில் தான் ஓடுகின்றன ஆனால் அப்பாவி மக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர்.

★ ஐ. தே. க. அரசை போலல்லாமல் ஐக்கிய முன்னணி அரசு யாழ் மக்கள் தாங்களும் இலங்கை பிரஜைகள் தான் என ஏற்றுக் கொள்ளக் கூடிய, நினைக்கக் கூடிய அளவிற்கு செயற்பட வேண்டியது அவசியமாகும்.

★ யாழ். மக்கள் எம்மிடம் யுத்தம் வேண்டாம்; சமாதானம் வேண்டும் என கோரிக்கை விடுத்தார்கள். நாமும் சிங்கள மக்களும் விடுக்கும் கோரிக்கையும் இதே தான்.

★ வடபகுதி மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்கள், எரிபொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றை போதியளவு அரசாங்கம் அனுப்பி வைத்தால்தான் அரசாங்கம் நேர்மையாக செயல்படுகிறது என்றும், தமது பிரச்சினைகளை மனித நேயத்துடன் அணுகுகிறது என்றும். இதே வழியில் சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் வடபகுதி மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். (இ-10-9)

## கலப்பதிக்கு நீதிமன்றம் நோட்டீஸ்!

கொழும்பு, பெப். 28

தேசிய மீட்பு முன்னணியைச் சேர்ந்த எம். பியான நிஹால் கலப்பதியை அடுத்த மாதம் 8ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிபடும்படி கொழும்பு மேலதிக நீதிவான் என். வி. கருணாதிலக நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

ஜே. வி. பியின் முன்னாள் தலைவரான றோஹண விஜேவீராவின் மைத்துனரான டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஒ-எ)

## வட்டு. லயன்ஸ் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, பெப் 28

யாழ். மாவட்ட முன்னாள் லயன்ஸ் கழக ஆளுநரான வைத்திய கலாநிதி லயன் ரி. பகீரதன் திருநெல்வேலி முத்துத்தம்பி சிறார் இல்லத்துக்கு இரண்டு மூடை மைசூர் பருப்பை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேலும், வட்டுக்கோட்டை மேற்கு முருகையா கோயிலடியில் அமைந்துள்ளவட்டுக் கோட்டை லயன்ஸ் கழக செயலாளர் இல்லத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஏழை மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-161)

# 13 ஆயிரம் தமிழ் பேசும் ஆசிரியருக்கு பற்றாக்குறை

கொழும்பு, பெப். 28

நாட்டிலுள்ள தமிழ் பேசும் பாடசாலைகளில் ஏறக்குறைய 13 ஆயிரம் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இது தற்போது சேவையிலுள்ள ஆசிரியர் எண்ணிக்கையில் 27.14 சதவீதமாகும்.

1994 ஆம் ஆண்டின்— குடிசனமதிப்பீடு - புள்ளி விவரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

நாட்டில் மொத்தம் 10 ஆயிரத்து 162 பாடசாலைகள் உள்ளன. 1 லட்சத்து 90ஆயிரம் ஆசிரியர்கள் சேவையிலுள்ளனர். இவற்றில் 2 ஆயிரத்து 812 பாடசாலைகள் தமிழ் பேசும் மாணவர்களுக்குரியவை. மொத்தப் பாடசாலை தொகையில் இது 27.7 சதவீதமாகும். இந்த ரீதியில் 52 ஆயிரத்து 600 தமிழ் பேசும் ஆசிரியர்கள் சேவையில் இருக்க வேண்டும்.

அல்லாவிடினும், இன விகிதாசாரப்படி மொத்த சனத் தொகையில் 25 சதவீதத்தினர் தமிழ் பேசும் மக்களாவர். இந்த வகையிலும் கூட மொத்தம் 47 ஆயிரத்து 500 தமிழ் பேசும் ஆசிரியர்கள் சேவையில் இருக்க வேண்டும். ஆனால் கல்வி அமைச்சின் புள்ளி விவரக்கோவையின்படி. தற்போது சேவையிலுள்ள மொத்த தமிழ் பேசும் ஆசிரியர் எண்ணிக்கை 34ஆயிரத்து 600 மட்டுமே.

12 ஆயிரத்து 900 தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது

இப்பற்றாக்குறை நிலவும் ஆசிரியர் எண்ணிக்கையானது சேவையிலுள்ள மொதத ஆசிரிய எண்ணிக்கையின் 27.14 சதவீதமாகும். (இ-14)

### தலைவர், பணிப்பாளரை நீக்குக!

## எயர் லங்கா நிறுவனத்தின் மதில்களில் சுவரொட்டிகள்!

கொழும்பு, பெப். 28

எயர் லங்கா நிறுவனத்தின் தலைவரையும், பணிப்பாளர் ஒருவரையும் பதவி நீக்கம் செய்யும்படி கோரும் சுவரொட்டிகள் அந்த நிறுவனத்தின் மதில்களில் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எயர் லங்கா இயக்குநர் சபையின் தலைவராக வருவதற்கு விரும்புகின்ற சில சக்திகளே இச்சுவரொட்டி இயக்கத்துக்கு பொறுப்பு என்று சொல்லப்படுகிறது.

முன்னாள் இராணுவத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராகப் பணிபுரிந்தவருமான ஜெனரல் சேபால ஆட்டிகல தற்போது எயர் லங்காவின் தலைவராகப் பணிபுரிந்து வருகின்றார்.

இது பற்றி கொழும்புச் செய்தியாளர்கள் அவரிடம் கேட்டதற்கு —

''ஜனாதிபதியோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ உத்தரவிட்டால் நான் பதவி விலகத்தயார்'' என்று ஜெனரல் ஆட்டிகல தெரிவித்தார். (ஒ-எ)

### பிரபல பிரிட்டிஷ் நிறுவனம்

## எயர் லங்கா நிறுவனத்தை வாங்கும் சாத்தியம் உண்டு

கொழும்பு, பெப். 28

பிரிட்டனில் உள்ள மிகப்பெரிய தனியார் நிறுவனமான வேர்ஜின் குறூப் எயர்லங்கா விமான சேவையை வாங்கும் சாத்தியம் பற்றி பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது விஷயமாக வேர்ஜின் குறூப் நிறுவனத்தின் உரிமையாளர் றிச்சர்ட் பிரன்ஸன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுகள் நடத்தியதாக ''த ஐலண்ட்'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது

எயர் லங்காத் தலைவர் சேபால ஆட்டிகலையையும் திரு பிரன்ஸன் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எயர்லங்கா விமானசேவை நிறுவனத்தைக் கொள்வனவு செய்வது குறித்து திடமான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறிய திரு. பிரன்ஸன், வாங்கும் சாத்தியம் பற்றி பொதுவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - பிரிட்டனின் வேர்ஜின் குறூப் நிறுவனம் எயர்லங்கா சேவையை வாங்குவது பற்றி தமக்கு எதுவுமே தெரியாதென்று ஜென்ரல் சேபால ஆட்டிகல தெரிவித்தார். (ஒ-எ)

### சட்டவிரோத ஆயுதக் கொள்வனவு:

## தகுந்த தகவல் கிடைத்தால் அரசு விசாரணை நடத்தும்

கொழும்பு, பெப் 28

போதுமான தகவல்கள் வழங்கப்படும் பட்சத்தில் சட்ட விரோத ஆயுதக் கொள்வனவு விவகாரம் பற்றி அரசு விசாரணை நடத்தும் என்று நீதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படவிருக்கும் முறைகேடுகள் அடங்கிய பட்டியலில் ஆயுதக் கொள்வனவு மோசடி பற்றிய விவகாரம் ஏன் சேர்க்கப்படவில்லை என்று கேட்டதற்கு, அந்த அதிகாரி முன்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் 16 விஷயங்கள் விசாரிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆயுதக் கொள்வனவு விவகாரம் இவற்றில் அடங்கவில்லை. (ஒ-எ)

''போய்ஸ் அன்ட் கேர்ள்ஸ் கம் அவுட் டு டை'' (Boys and Girls Come out to Die) என்ற தலைப்பில் பெண் புலிகளின் முகப்புப் படத்துடன் பெண் புலிகள் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்றை லண்டனிலிருந்து வெளிவரும் ''இன்டிபென்டன்ற்'' வாராந்த பத்திரிகை தனது 26-2-95ஆம் திகதி இதழ்ல் பிரசுரித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ஷன் மைக்கல் என்ற செய்தியாளர் இக்கட்டுரையை எழுதி உள்ளார்.

# தமிழர்களிடையே உள்ள உயிர்த்தியாக உணர்வு ஹமாஸ், ஜிஹாத்திடம் உள்ளதைவிட மேலானது

''இன்டிபென்டன்ற்'' பத்திரிகையில் வெளியான இந்த ஆறு பக்கக் கட்டுரையில் வெளிவந்த அம்சங்களை பி. பி. ஸி வெளியிட்டது.

அவை வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திலுள்ள யாழ்ப்பாணத்தில் முக்கியமான இடங்களிலும் சந்திகளிலும் சில இடங்களில் நெடுதுயர்ந்த பனை மரங்களிலும் போராளிகளின் மாபெரும் 'கட்—அவுட்' களை காணமுடிகிறது.

பயங்கரமான போர் பற்றிய திரைப்பட விளம்பரப் பலகைகளோ என்று எண்ணத் தோன்றும் இந்த இடங்கள் உண்மையில் போரில் உயிர் நீத்த கொரில்லா வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வழிபாட்டுத்தலங்களாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக கிட்டத்தட்ட ஒரு லட்சம் படைகள் அடங்கிய அரசின் இராணுவத்தினருக்கு எதிராகப் போரிட்ட விடுதலைப் புலிகள் இலங்கையின் வடபுலத்தில் தமிழீழம் என்ற தனித் தாயகம் ஒன்றை அமைத்துவிட்டார்கள்.

இழுத்தடிக்கும் நீண்ட உள்நாட்டுப் போர்களும் பிரிவினை கொரில்லாப் போராட்டங்களும் நிறைந்துள்ள இன்றைய உலகில் விடுதலைப் புலிகளின் போராட்டம் வலுவுள்ளதாக அலங்கரிப்பதாக இருக்கிறது.

இலங்கை அரசை எதிர்த்துப் போராடும் விடுதலைப் புலிகளில் பெரும்பாலானோர்கள் இளம் பெண்களும், சிறுவர்களும்.

தியாகத்தையும் மரணத்தையும் விரும்பி ஏற்கும்படியாக உள்ளவர்கள் இவர்கள்.

### பெண் போராளிகளை கேலியாக எண்ணிய சிப்பாய்கள்

1986 ஆம் ஆண்டுதான் ஸ்ரீலங்கா இராணுவம் ''பைனாகுலர்கள்'' மூலம் பெண் போராளிகள் இருப்பதைக் கண்டார்கள். முதலில் அவர்கள் இவர்களைக் கேலியாகப் பார்த்தார்கள்.

''அரசுப் படைகள் தங்கள் 'வாக்கிடோக்கி' மூலம் எம்மை அச்சுறுத்த முயன்றார்கள் விரைவில் எம்மை உயிருடன் இழுத்துச் செல்லப் போவதாக மிரட்டினார்கள் இவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்தவில்லை'' என்கிறார்கள் பெண் போராளிகள்.

ஆயிரக் கணக்கான பெண்கள் கொரில்லாக்களாக மாறினார்கள். நீண்ட முடியை பின்னலிட்டு முடிந்து பெரும் போர்களில் கடந்த 9 ஆண்டுகளாக ஆண்களுக்குச் சமனாக இவர்கள் போரிட்டு வருகிறார்கள்.

உதாரணமாக 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெண் புலிகளில் ஒன்[illegible]பொன்று பலாலியில் முகாம் ஒன்றை தாக்கி கடும் சேதங்களை விளைவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிப் படையில குறைநதது மூவாயிரம் பெண்புலிகள் இருக்கிறார்கள்.

பெண் புலிப்படை பிரிவு ஒன்றின் சராசரி வயது 16 முதல் 22 வரை

இதைவிட வயது குறைந்த

## மாவோ- சேகுவேராவுக்கு ஒப்பானவர் பிரபாகரன்

பெண் புலிகளும் உள்ளனர்.

### தற்கொலைப் படையினர்

ஸ்ரீலங்கா அரசுக்கு கடும் தொல்லை தந்து தடுத்து நிறுத்துபவர்கள் புலிகளின் தற்கொலைப் படைகள் தான்.

நூற்றுக் கணக்கானவர்கள் தற்கொலைப் படைத்தாக்குதலில் ஈடுபட்டு உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். அவர்களில் பலர் பெண்புலிகள். அநேகமாக அனைவருமே 20 வயதுக்கு உட்பட்டவர்கள்.

கரும்புலிப் படையினர் என்று அழைக்கப்படுபவரின் பயிற்சிக்காக வீடியோப் படங்கள் வகுப்பறைகளில் காட்டப்படுகின்றன.

அவை அழகிய மலர்களின் ''குளோஸப்'' காட்சியுடன் மகிழ்ச்சியூட்டும் இனிய இசையுடன் தொடங்குகின்றன.

ஒரு குடும்பம் சோலையில் இனிமையாகப் பொழுதைக் கழிக்கும் போது இராணுவம் விமானம் மூலம் குண்டு வீச இளைஞனான ஒரு மகனைத் தவிர குடும்பத்தில் அனைவரும் இறந்து அழிந்து விடுகின்றனர். பழி வாங்கும் உணர்வுடன் அவ் இளைஞன் [illegible] புலிப்படையில் சேர்கிறான்— அவனுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அப்பொழுது கரும்புலிப் படைத் தளபதி ஒருவர் வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட வாகனமொன்றை ஓட்டிச் சென்று அத்துடன் தானும் வெடித்து உயிரிழக்க ஒருவர் தன் பணிக்குத் தேவையென அறிவிக்கின்றார்.

இதற்கு பல கரும்புலிகள் போட்டி போட்டு முன்வருகிறார்கள். குலுக்கல் முறையிலே ஒருவர் தெரிவுசெய்யப்படுகிறார்.

இந்தத் தற்கொலைப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் உற்சாகத்தில் குதிக்க மற்றவர்கள் தமக்கு இந்தப் பேறுகிடைக்கவில்லையே என்று வருந்துகிறார்கள்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் வெடிகுண்டு லொறியில் செல்வதற்கு முன் புலிகளின் முகாமில் தான் மேற்கொள்ளும் அன்றாடப் பணிகளை கடமை உணர்வுடன் செய்வது காட்டப்படுகிறது.

பின்னர் லொறியில் அவர் செல்கிறார் அடுத்த காட்சி பெரும் வெடிப்பு சிதறிய உடல்கள், உறுப்புகள்.

இந்த வீடியோப்படம் ஏற்படுத்தும் பாதிப்பு மிகமிக அதிகம். தமிழர்களிடையே யுள்ள உயிர்த்தியாக உணர்வு ஹமாஸ், மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் என்ற மத்திய கிழக்கு அமைப்புகளிடம் இருப்பதை விட அதிகமானது.

### மாவோ. சேகுவேராவுக்கு சமமானவர் பிரபா

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் போற்றுதற்குரிய தலைவராகப் போற்றப்படுகிறார். அவரைபலர்நேரில்பார்த்ததே இல்லை. ஆனால் அவருடைய படம் எல்லா வீடுகளிலும், கடைகளிலும் பள்ளிகளிலும் உள்ளது.

இன்று உலகில் கெரில்லா யுத்தத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னர் கெரில்லாப் போரை வழி நடத்திய மாவோ, சேகுவேரா போன்றோருக்கு இணையாக உள்ளார்.

அடிப்படைப் பயிற்சி முடிந்ததும் ஒவ்வொரு புலி வீரருக்கும் சயனைட் குப்பி வழங்கப்படுகிறது

பகைவர்களிடம் உயிருடன் பிடிபடுவது மிகப்பெரிய அவமானம் என்று திரு பிரபாகரன் புலிகளிடம் கூறிவருகிறார்.

கழுத்தைச் சுற்றியுள்ள சயனைட் குப்பியைக் கடித்து உயிர்விட எவருமே தயங்குவது இல்லை.

பள்ளிப் பருவத்திலேயே இனப் போரின் மூல காரணங்கள் போதிக்கப்படுகின்றன.

1948 ஆம் ஆண்டு முதல் சிங்கள புத்த மதத்தினர் தமிழர்களுக்கு எதிராக பாகுபாடு செய்தது —

1956, 58, 59 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் வேட்டையாடிக் கொல்லப்பட்டது —

தமிழ்ப் போராளிகள் 70 களில் உருவானது —

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்தது — ஆகியவை விளக்கப்படுகின்றன.

தமிழர்களிடையே சாதிப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கும் பெண்களின் உரிமைகளை நிலைநாட்டி சம உரிமை வழங்குவதற்கும் பலர் தலைவர் பிரபாகரனைப் பாராட்டி உள்ளனர்.

### பெண் கரும்புலி நளாயினி

பெண் கரும்புலி லெப். கேணல் நளாயினியின் பெற்றோரை சந்தித்த போது, செப்டெம்பர்மாதம் ஸ்ரீலங்கா கடற் படையின் கப்பலைத் தகர்த்து நளாயினியுடன் மேலும் இருவர் உயிர் நீத்த பின்புதான் நளாயினி கரும்புலியைச் சேர்ந்தவர் என்பது தமக்குத் தெரியவந்தது என்றார் அவரது தந்தை.

உயிரிழப்பதற்கு முன் திடீரென்று ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வந்தார் நளாயினி. அன்று விருந்து உண்டார். கண்ணீர் விடவோ கலங்கவோ இல்லை. தான் திரும்பி வரப் போவதில்லை என்று கூட நளாயினி எம்மிடம் சொல்லவில்லை என்றார் தந்தை.

யாழ்ப்பாணம் ஒரு தனி உலகம். போக்குவரத்துப் பொலீஸ், பட கோட்டிகள் என்று எல்லோருமே இளைஞர்கள் தான்.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணியுடன் சென்றமினிபஸ் சில்லு கழன்று ஓடியது

வடமராட்சி, பெப். 28

ஓடிக்கொண்டிருந்த மினிபஸ்ஸின் ஒன்றின் முன்பக்கச் சில்லு ஒன்று கழன்று ஓடியதால் அதில் பயணம் செய்த பிரயாணிகள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் அண்மையில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் இடம் பெற்றது முன் - இடப்பக்க சில்லு கழன்று ஓடியதால் விபத்துக்குள்ளாக இருந்த மினிபஸ்ஸை சாரதி மிக லாவகமாக நிறுத்தினார். இதனால் பெரும் இழப்புகள் தவிர்க்கப்பட்டன. புதிய சில்லு பொருத்தப்பட்டதை அடுத்து மினிபஸ் தனது பயணத்தைத் தொடர்ந்தது. [எ-5-173]


## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## பதவி வெற்றிடங்கள்

புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாகிய எமது நிதிப்பிரிவிலும், திட்டப்பிரிவிலும் கீழ்க்காணும் பதவிகளுக்கு **11-03-1995** இற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் (ஆண்கள்)**

கல்வித்தகைமைகள்:

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் விசேடசித்தி. அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் பரீட்சையில் இடைநிலை சித்தி/ கணக்காய்வு அனுபவம் என்பவை மேலதிக தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

வயதெல்லை: **20 — 45** வரை.

**உள்ளகக் கணக்காய்வு பயிலுநர்கள் (ஆண்கள்)**

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் வர்த்தகமும் நிதியும் பாடத்தில் விசேட சித்தி.

கணக்கியல்துறையில் அனுபவம் மேலதிக தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

வயதெல்லை; **18 — 25** வரை.

**பகுதி இணைப்பாளர்கள் (DIVISIONAL CO-ORDINATORS)** (இருபாலாரும்)

யாழ் மாவட்டத்திலுள்ள எமது பிரிவு அலுவலகங்களை ஒருங்கிணைத்து, திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பகுதி இணைப்பாளர்களின் கடமையாகும்.

கல்வித்தகைமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டப்படிப்பின் கீழ்க்காணும் ஏதாவதொரு துறைசார்ந்த சித்தி முகாமைத்துவம்/ சமூகவிஞ்ஞானம்/ பொருளியல்/ வர்த்தகமும் நிதியும். அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களில் மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் பணிபுரிந்த அனுபவமுள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பளம்:

நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாக இணைப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(35415)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வாமதேவன் இராஜேஸ்வரி [தங்கம்]

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி வாமதேவன் இராஜேஸ்வரி 27 - 02 - 95 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் நடராசா வாமதேவனின் (இலங்கை மின்சார சபை ஊழியர், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், கரேசினி, சர்மினி நிஷாந்தினி (ஸ்ரீ விக்கினேஸ்வரா மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28 - 02 - 95) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. வாமதேவன் [கணவன்]

நல்லூர் தெற்கு,
நல்லூர்.

(35429)

### தம்பிப்பிள்ளை இராசலிங்கம் (V. T. R)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை இராசலிங்கம் நேற்றுக் காலமாகி விட்டார். அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளன் (இங்கிலாந்து), தயாபரன் [ஜேர்மனி], தயாளினி தயாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசகோபால சிங்கம் [சுவிஸ்], வேதநாயகம் (சவூதி), இரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சன், மயூரி, தக்சி, கனேஸ், கஸ்தூரி, கபில், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (28-2-95) நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்
திருமதி இ. இராசலிங்கம் (மனைவி)

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[35431]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28- 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவது பற்றி ஐ.நா. ஆராயும்

## இன்று முதல் 3 வாரங்களுக்கு ஜெனிவாவில் கூட்டம்

லண்டன், பெப் 28

இலங்கை, இத்தாலி, சைப்பிரஸ், கௌதமாலா, பேரு முதலிய நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்து ஐ நா. ஆராயவிருக்கின்றது.

இனவாதம், இனரீதியான தனிச்சலுகைகள் முதலியவற்றை ஒழிப்பதற்கான ஐ.நா. குழுவின் புதிய கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கின்றது.

மூன்று வாரங்கள் நடைபெறும் இக்குழுக் கூட்டத்தில் இலங்கை உட்பட பல நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படுவது குறித்து பரிசிலனை செய்யப்படவிருக்கின்றது.

மனித உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அனைத்து நாடுகளிலும் ஒப்பந்த நிபந்தனைகள் பேணப்படுகின்றதா என்பதை இக்குழு முக்கியமாய் பரிசிலனை செய்யும்.

மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அனைத்து நாடுகளும் தத்தமது நாடுகளில் மனித உரிமைகள்பேணப்படுவது குறித்து பரிசிலிக்க இக்குழுவை அனுமதிப்பது வழக்கம் என்பதும் —

இப்பரிசிலனை இரகசியமாகவே நடைபெறும் என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும்.

18பேர் கொண்ட ஒரு குழுவே பரிசிலவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

# பிரபாவை இந்தியா தேடுவதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்படும்

## வெளியுறவுச் செயலாளர் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்தியாவில் தேடப்படும் ஒருவர் என்று இலங்கை அரசுக்கு தெரிவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு கே. ஸ்ரீநிவாசன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து திரு. பிரபாகரன் நாடு கடத்தப்படுவாரா என்று பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் கேட்டதற்கே அவர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

இலங்கையுடன் இணைந்தே இந்தியா எப்பொழுதும் நடவடிக்கை எடுத்து வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

''ராஜீவ்காந்தி படுகொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது குறித்து பத்திரிகைகள் மாறுபட்ட செய்திகளை வெளியிட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நான் எதனையும் கூறவிரும்பவில்லை'' — என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# ஆஸ்திரேலியாவில் குடியேற 250 இலங்கையருக்கு வாய்ப்பு

கன்பரா, பெப். 28

இலங்கையில் நிலவும் போர்க்காலச் சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு அங்கே இடப்பெயர்ந்து அல்லல்படுகின்ற மக்களில் 250 பேரை ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து வாழ அனுமதிக்கின்ற விசேட திட்டம் அந்நாடு ஒன்றை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

விசேட உதவிப் பிரமாணத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின்படி இலங்கையில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களில் 250 பேர் ஆஸ்திரேலியாவுக்குக் குடியேறும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

ஆஸ்திரேலியக் குடியுரிமையுள்ள அல்லது 01-01 1994 இல் அல்லது அதற்கு முன்னர் நிரந்தர வசிப்புரிமை பெற்றவர்கள் தங்களது உறவினர்களை மேற்படி திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவுக்கு வரவழைத்துக் கொள்வதற்கு தமது பிரேரிப்பைச் செய்ய முடியும்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

வகுப்பு 215இன் கீழ் வழங்கப்படும் இந்த வீசாவுக்கான விண்ணப்பங்கள் இப்போது ஆஸ்திரேலியாவில் உள்ள சகல குடிவரவு அலுவலங்களிலும் விநியோகிக்கப்படுகின்றன.

இந்தப் படிவத்தை ஆஸ்திரேலியப் பிரஜை கிவிட்ட அல்லது நிரந்தர வசிப்பிட உரிமை பெற்றவர் தாம் பூர்த்தி செய்ய வேண்டியதைப் பூர்த்தி செய்து உரிய தஸ்தாவேஜுகளுடன் இலங்கையில் உள்ள தான் பிரேரிக்கும் நபருக்கு அனுப்ப வேண்டும். பின்னர் பிரேரிக்கப்பட்டவர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு விண்ணப்பம் செய்பவர் குடும்பஸ்தராய் இருக்குமிடத்து அவரது விண்ணப்பம் தெரிவு செய்யப்பட்டால் அவர் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் ஆஸ்திரேலியாவுக்குக் குடியேற அனுமதிக்கப்படுவார்.

இத் திட்டத்தின் கீழ் வேறு நாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் விண்ணப்பிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# திருமலை மாவட்டத்தின் எல்லைப்புற காட்டுப்பகுதியில் படைக் குவிப்பு!

திருகோணமலை, பெப். 28

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் காட்டுப் பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிண்ணியாப் பிரதேச எல்லையோரக் காட்டுப்பகுதியில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

எல்லைப் புறங்களில் உள்ள படையினரின் காவலரண்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகளுக்காக கனரக வாகனங்கள் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இரவோடிரவாக இந்தப் படைக் குவிப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-7)

### றிச்சர்ட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செஸ்னா விமானமும் அன்றைய தினம் பறந்து திரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்றை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அன்றைய தினம் செலுத்தினார் என்றும்—

அந்த அதிகாரி அதன் பின்னர் விமானப் படையில் மிக உயர் பதவி ஒன்றுக்கு பதவி உயர்த்தப்பட்டார் என்றும்—

விசாரணையாளர்கள் அரசுக்கு அறிவித்துள்ளனர்.

—குறிப்பிட்ட நாளன்று அப்பகுதிக் கடலில் ஹெலிக்கொப்டர்களின் நடமாட்டங்கள் இருந்தனவா?

—ஹெலிக்கொப்டர்களில் ஒன்றில் சிரேஷ்ட விமானப் படை அதிகாரி ஒருவர் அமர்ந்து இருந்தாரா?

—அவர் பின்னர் விமானப் படையில் உயர் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட்டாரா?

—அவரின் இன்றைய நிலை என்ன?

இக்கேள்விகளுக்குப் பதில் காண அரசாங்கம் உதவினால்—

றிச்சர்ட் டி சொய்ஸாவைக் கொலை செய்தது யார்? அவரின் உடலை அழித்தது யார்? என்பன போன்றவற்றைக் கண்டு பிடிக்க முடியும் என்று விசாரணையாளர்கள் அரசுக்கு அறிவித்திருப்பதாக ''சண்டே ஐலன்ட்'' தெரிவித்துள்ளது. (உ-எ)

# மொரார்ஜி தேசாய்க்கு நூறாவது பிறந்தநாள்

புதுடில்லி, பெப். 28

முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் இன்று தமது நூறாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.

1896 ஆம் ஆண்டுபெப்ரவரி 29 ஆம் திகதி குஜராத்தின் சூரத் மாவட்டத்தில் பிறந்த மொரார்ஜி தேசாய்மகாத்மா காந்தியுடன் இணைந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

1956 இல் நேருவின் அரசில் அமைச்சராகப் பணியேற்ற மொரார்ஜி 1967 முதல் இந்திரா காந்தி அரசில் துணைப் பிரதமராக பணிபுரிந்தவர்.

1977 இல் இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத முதலாவது அரசு மொரார்ஜி தேசாயின் தலைமையில் பதவியேற்றது இரண்டரை ஆண்டு காலம் அவர் பிரதமராகப் பணிபுரிந்தார்.

அதன் பின் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற மொரார்ஜிக்கு 1991 இல் பாரத ரத்னா பட்டம் வழங்கப்பட்டது. (உ)

### இந்திய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியவற்றை மட்டுமல்ல, பெரும்பாலும் இந்திய மத்திய அரசையும் கோபப்படவைக்கும் என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அரசின் இந்த நடவடிக்கை இராணுவம் மற்றும் கடற்படைக்கு திருப்தியளித்திடினும், இதனை இந்திய அரசு எப்படி நோக்கப் போகிறது என்பது தெரியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### கண்காணிப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளை இங்கு அழைப்பிப்பதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதை இராணுவம் விரும்பாததும் —

அக்குழுக்களில் வெளிநாட்டவர்கள் இடம்பெறுவதை அரசு விரும்பாததுமே அக்குழுக்கள் செயற்படுவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### கப்பலில் வந்த திரிபோஷா

''கப்பலில் வந்த திரிபோஷா காலாவதியாகும் நிலையில் என்ற தலைப்பில் இம் மாதம் 12 ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

ஆனால் இந்த திரிபோஷா பைக்கெற்றுக்களில் ஒரு பகுதியின் பாவனை முடிவு திகதி 1. 3. 95 என்றும் —

மறுபகுதியின் பாவனை முடிவு திகதி 1. 4. 95 என்றும் — பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# பொ.ஐ.மு. அரசுக்கு எதிராக இ.தொ.கா. வாக்களிக்கும்

நாடாளுமன்றத்தில் பெருந்தோட்டத்துறை அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தின் முடிவில் அரசாங்கத்துக்கு எதிராக இ. தொ. கா வின் எம். பிக்கள் வாக்களிப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்களில் இருபது சதவீதப் பங்குகளை பொது மக்களுக்கு விற்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக இந்த ''எதிர்ப்பு வாக்கு'' செலுத்தப்படும் என்று இ. தொ. கா. தெரிவித்துள்ளது

தோட்டங்களின் பத்துச் சதவீதமான பங்கை தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப் போவதாக அரசு முன்னர் அறிவித்து இருந்தது. அதை அரசு அமுல் நடத்தத் தவறிவிட்டதாக இ தொ.கா. குற்றஞ்சாட்டியுள்ளது. (உ-எ)

# ஏறாவூர்ப் பகுதி கடைகளில் புகுந்து பொலிஸார் பட்டாசுகளை அள்ளி எடுத்துச்சென்றனர்!

கொழும்பு, பெப். 28

அறிவுறுத்தல்களையும் மீறி பட்டாசு கொளுத்தியதால் ஆத்திரமடைந்த பொலிஸார் கடைகளிலிருந்து பலவந்தமாக பட்டாசுகளை அள்ளிக்கொண்டு சென்றனர்.

ஏறாவூரில் நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்ட முஸ்லிம் மக்களை பாதுகாப்புக்கருதி பட்டாசு கொளுத்த வேண்டாம் என்று பள்ளி வாசல்களூடாக பொலிஸார் கேட்டிருந்தனர் என்றும் -

மக்கள் அதனைச் செவிசாய்க்காது போகவே கடைகளில் புகுந்த பொலிஸார் விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளை அள்ளிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14]

# தமிழ் நாட்டில் உள்ள அகதிகளின் 170 படகுகள் விரைவில் ஒப்படைப்பு

கொழும்பு, பெப். 27

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளின் 170 படகுகள் இலங்கை அதிகாரிகளிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளதாக இந்திய வருமான புலனாய்வு பணிப்பாளர் நாயகம் பி. கே. அகழ்வார் தெரிவித்தார்.

இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த கொழும்பு வந்த இவர் செய்தியாளர்களைச் சந்தித்த போது முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

# யாழ். மண்ணில் ஒலிவ் மரம் சோதனை முயற்சி வெற்றி!

யாழ்ப்பாணம், பெப். 28

இத்தாலி நாட்டில் வாழும் தமிழீழத்தவர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட எண்ணெய்ப் பயிரான ஒலிவ் மரம் பரீட்சார்த்தமான முறையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கத்தைய நாடுகளுக்கு நல்ல வருவாயைத் தேடிக் கொடுக்கும் ஒலிவ் மரம் மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையிலுள்ள பூங்கனியியல் தோட்டத்தில தற்போது நல்ல முறையில் எமது மண்வளத்துடன் ஒன்றி செழிப்பாக வளர்ந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

இதனை அடுத்து மேலும் இம் மரங்களை தருவித்து நடுகை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்கத்தைய நாடுகளில் ஒலிவ் எண்ணெய் உணவுத் தேவைக்காகவும், மருத்துவத் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (எ)

### கொடுத்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தான்.

ஆனால் மற்ற விடயங்களைப் பொறுத்தவரை அவை திருப்திகரமாக இல்லை.

சில பொருள்கள் தவிர ஏனையவை மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் வவுனியாவில் நிலைமை வேறாக உள்ளது.

வவுனியாவுக்கு வடக்கே பொருள்கள் செல்வதற்கு படையினர் தடைகளைப் போட்ட வண்ணம் உள்ளனர்; கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர்.

வடக்கிற்கு பாதுகாப்பான பாதை திறக்கப்படாததால் பொருள்களை வடக்கே எடுத்து வரமுடியாதிருப்பதோடு, குறைந்த விலையில் விற்க முடியாமலும் உள்ளது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி அரசு பேசுகின்றது.

இதனால் மக்கள் மத்தியில் ஒரு உற்சாகமின்மை காணப்படுகிறது. அது தவிர கொடுத்த வாக்குறுதிகளைக் கூட அவர்கள் நிறைவேற்றவில்லை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரைஅரசின்நிலைப்பாடுகள் எல்லாவற்றுக்கும் அவர்கள் இணங்கிவருகின்றனர். அரசின் பல கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இப்பொழுது பெரிய சிக்கலாக இருப்பது பாதை திறப்பது பற்றிய விவகாரமே மக்களின் போக்குவரத்துக்கு பாதுகாப்பான ஒரு பாதை இருப்பது அவசியம். பொருளாதார வளர்ச்சிக்கும் புனர்நிர்மாணப் பணிகளுக்கும் கூட பாதுகாப்பான பாதை அவசியம்.

இதற்காகவே புலிகள் பூநகரிப் பாதையைத் திறக்க கோருகின்றார்கள்.

இந்நிலையில் அரசு இந்த விண்ணப்பத்துக்கு செவிசாய்த்து விட்டுக்கொடுத்தால் இப்பிரச்சினை தீரும்.

பேச்சுக்கான தமது மன உறுதியை — நல்லெண்ணத்தை— இரு தரப்பினரும் — செயற்பாட்டில் இல்லாவிட்டாலும் — பேச்சளவிலேனும் வெளிப்படுத்திவருவதால், சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. — என்று தெரிவித்தார். (உ-7)

# கோழிகளுக்கு நோய்த்தடுப்பூசி

வட்டுக்கோட்டை, பெப். 28

வட்டுக்கோட்டை, கால்நடை வைத்திய நிலையத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் காலை 8 மணிமுதல் கோழிக் கொள்ளை நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் பணியும் கால் நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தும் சேவையும் நடைபெற்று வருகின்றன. (க-161)

# மருத்துவ சான்றிதழ் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 28

மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குரிய படிவங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களது மருத்துவப் பரிசோதனையைச் செய்துகொள்வதற்கு யாழ்ப்பாணம், கண்டி வீதியில் உள்ள வில்லியம் ஹாவே மருத்துவமனையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இந்நடைமுறை நாளை முதல் செயற்பாட்டுக்கு வரும் என்றும் —

சம்பந்தப்பட்டோர் மருத்துவமனைப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அதற்கான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்படியும் —

நிர்வாகசேவைப் பகுதியினரின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org